ஹிதபாஷிணீ வெளியீடு

விதுரநீதி

யக்ஷப்பிரச்னம்

பாரத ஸாவித்ரீ

பிரசுரித்தவர் :

R. முத்துகிருஷ்ணசாஸ்திரி

ஹிதபாஷிணீ ஆசிரியர்

1835/3 மேலவீதி, தஞ்சாவூர்.

காபிரைட்] 1956 [விலை அணா 12

உ

ஸ்ரீராமஜயம்

முகவுரை

விதுரநீதி:— இது ஸ்ரீ மஹாபாரதம் உத்தியோகபர்வத்தில் உள்ளது. இதில் விதுரர் திருதராஷ்டிரருக்கு எடுத்துரைத்த பலநீதிகள் அடங்கியுள்ளன. இவையெல்லாம் தர்மம், அர்த்தம், காமம் என்ற முதல் மூன்று புருஷார்த்தங்களையே பெரும்பாலும் பின்பற்றியவை. "ஸநத்ஸுஜாதீயம்" என்ற இதற்கு அடுத்தப்பிரகரணத்தில் நான்காவது புருஷார்த்தமாகிய மோக்ஷத்தைப்பற்றி விரிவாகக்கூறப்பட்டுள்ளது.

இந்தப் பிரகரணத்தில் விதுரர் அவருக்கு முற்காலத்திய நீதி கிரந்தங்களின் ஸாராம்சங்களை யெல்லாம் திரட்டிக் கூறியிருக்கின்றார். இது பிற்காலத்துக் கவிகளாலும் மந்திரிகளாலும் விசேஷமாகப் போற்றப்பட்டிருக்கிறது. இந்த பிரகரணத்தில் அடங்கியுள்ள உயர்ந்த கருத்துக்களை ஸ்திரீகள், புருஷர்கள், முக்கியமாக அரசியல் வாதிகள், மந்திரிகள், மற்றுமுள்ள நிர்வாகிகள் அனைவரும் அவசியம் அறியவேண்டும். இதைச்சரிவர அறிந்து இதன்படி அனுஷ்டித்துவந்தால் குடும்பத்தையோ அல்லது அரசாங்கத்தையோ மிகத்திறமையாக நடத்திவரலாம் என்பதில் ஐயமில்லை.

1948–49ம் ஆண்டுகளில் எமது ஹிதபாஷிணியில் இதில் அடங்கிய முக்கிய அம்சங்கள் வெளிவந்திருக்கின்றன. இப்பொழுது ஆங்காங்கு நாம் நிகழ்த்திவரும் மஹாபாரதப் பிரவசனத்தில் இப்பகுதியைக் கேட்ட பல ஆஸ்திகர்கள் இதை தனி புத்தகமாக வெளியிட்டால் மிக உதவியாக இருக்குமெனக் கருதினர். அதன்படி

ஹிதபாஷிணியில் வெளிவந்தவற்றுள் சில வற்றைத் திருத்தியும் சில அதிகமான அம்சங்களைச்சேர்த்தும் இப்புத்தகம் வெளியிடப்பட்டிருக்கிறது.

இதில் மூலத்தில் உள்ள சுலோகங்களுக்கெல்லாம் முழு மொழிபெயர்ப்பு இல்லாத போனாலும் கூடிய வரை அவற்றின் கருத்துக்களை எல்லாம் வெளியிடுவதற்கு வேண்டிய முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது.

இதைப்போல் மஹாபாரதம் வனபர்வத்தில் உள்ள "**யக்ஷப்பிரச்னம்**" சுவர்க்காரோஹணபர்வத்தில் உள்ள "**பாரத ஸாவித்ரீ**" என்ற சிறந்த பகுதிகளின் மொழி பெயர்ப்புகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இந்நூலைச் சரியான காலத்தில் நேர்த்தியாக அச்சிட்டுக் கொடுத்த கும்பகோணம் ஸ்ரீ வெங்கடேஸ்வர் பிரஸ் உரிமையாளருக்கு நமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இந்நூலை அனைவரும் ஆதரித்து இதைப்போல் தற்காலம் கைவசமுள்ள பல சிறிய நூல்களை பிரசுரம் செய்ய நமக்கு ஊக்கத்தையளிக்கவேணுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

ஆசிரியர்.

இந்நூல் துர்முக—ஸ்ரீ ஆவணி—புரட்டாசி மாதங்களில் இந்நூலாசிரியர் அவர்களால் கும்பகோணம் ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள் மடத்தில் நிகழ்த்தப்பட்ட மஹாபாரதப் பிரவசன காலத்தில் வெளியிடப்பட்டது.

விதுரநீதி.

முன் வரலாறு.

பாண்டவர்கள் பன்னிரண்டு ஆண்டுகள் வனத்திலும் ஒரு ஆண்டு ஒருவரும் அறியாதமுறையில் விராட நகரத்திலும் "அஜ்ஞாதவாஸம்" செய்து அவர்களுடைய பிரதிஜ்ஞையை சரிவர நிறைவேற்றிவிட்டனர். பிறகு பாண்டவர்களுக்காக துருபதன் தம் புரோஹிதரை திருதராஷ்டிரரிடம் அனுப்பி பாண்டவர்களுக்குச் சேரவேண்டிய இராஜ்யத்தை விரைவில் கொடுத்துவிடும்படி கேட்டுக்கொண்டான். அதற்கு திருதராஷ்டிரன் நேர்முறையில் எவ்வித பதிலையும் உரைக்காமல் பாண்டவர்களுடைய பராக்கிரமத்தையும், ஸர்வசக்தரான ஸ்ரீ கிருஷ்ணன் அவர்களுக்குச் செய்துவரும் உதவிகளையும் கண்டு அஞ்சி எப்படியாவது போர் மூளாமல் இருக்கவேண்டுமென்பதற்காக ஸஞ்ஜயனை தர்மபுத்திரனிடம் தூதனாக அனுப்பினான். ஸஞ்ஜயனும் தருமரிடம் பல விஷயங்களைப் பேசிவிட்டு முடிவில் அவருடைய விருப்பத்தையும் அறிந்துகொண்டு ஹஸ்தினாபுரத்திற்கு வந்து திருதராஷ்டிரரிடம் அடியிற்கண்டவாறு சுருக்கமாகக் கூறலானார்.

"அரசே! தருமபுத்திரன் அவனுக்கு நியாயமாகக் கிடைக்கவேண்டியதையே விரும்புகிறான். எவ்வித குறையுமின்றி தர்மத்தை அனுஷ்டித்தே இராஜ்யத்தைக் கேட்கின்றான். அவன் மஹா புத்திமான். பல விஷயங்களைக் கற்றவன். ஒழுக்கமுள்ளவன். அப்படிப்பட்டவனை விரோதித்துக்கொண்டால் கௌரவர்கள் நிச்சயமாக அழிவார்கள்.

பரம ஆப்தர்களான விதுரன் முதலியோர்களை விரட்டி, துஷ்டர்களான கர்ணன் முதலியவர்களுடன் நேசங்கொண்டிருப்பதால் தாங்கள் இத்தரணியை ஆளத் தகுதியற்றவர்கள் என்றே கருதுகிறேன். வெகுதூரம் இரதத்தில் ஏறி வந்ததால் நான் இப்பொழுது மிகவும் களைப்புற்றிருக்கிறேன். நாளைய தினம் காலையில் துர்யோதனன், கர்ணன் முதலிய தங்கள் சுற்றத்தார் அனைவரும் கேட்கும்படி ஸபையில் அஜாதசத்ருவின் (தருமரின்) வார்த்தைகளை விரிவாக எடுத்துரைக்கிறேன்" எனக்கூறி விடைபெற்றுச் சென்று விட்டார்.

இதைக்கேட்டதும் திருதராஷ்டிராருடைய மனம் பதைத்தது. பற்பல எண்ணங்கள் தோன்றின. இரவில் வெகுநேரம்வரை தூக்கம் வரவில்லை என்ன செய்வது என்றறியாமல் விதுரரை அழைத்துவரச்சொன்னார். அவரும் விரைந்தோடிவந்தார் அண்ணனுக்கு ஆறுதல்கூற. அவரைக் கண்டதும் திருதராஷ்டிரர் "விதுரா! ஸஞ்ஜயன் தருமனிடமிருந்து திரும்பிவந்ததும் அவன் என்ன உரைத்தான் என்பதை விரிவாகக் கூறாமல் என்னை திட்டிவிட்டுச் சென்றிருக்கிறான். தருமன் என்ன சொன்னானோ! தெரியவில்லை. என் மனம் துடிக்கிறது. உடல் நடுங்குகிறது. இவ்வளவு நேரம் ஆகியும் நித்திரை வரவில்லை இச்சமயத்தில் எனக்கு ஆறுதலையளிக்கும் அரிய மொழிகளைச் சொல். நம் வம்சத்திலேயே நீதான் சிறந்த அறிவாளி' எனக்கேட்டுக் கொண்டார்.

விதுரருடைய பொன் மொழிகள்

விதுரர்—மிக்க பலமுள்ள எதிரியால் தாக்கப்பட்டவனுக்கும், சொத்தைப் பறிகொடுத்தவனுக்கும், காமவெறி

யெடுத்தவனுக்கும், திருடனுக்கும் தூக்கம் வராது. முதல் மூன்று காரணங்களும் தங்களிடமிருக்க நியாயமில்லை. ஒருக்கால் பிறருடைய பொருளில் பேராசை கொண்டு மனம் வருந்துகிறீர்களா? அல்லது கூடிய சீக்கிரம் இராஜ்யம் நம்மை விட்டுப்போய் விடுமே என்று நடுங்குகிறீர்களா? துர்யோதனன், கர்ணன், சகுனி, துச்சாஸனன், முதலிய அறிவீனர்களிடம் அரசாங்கத்தை ஒப்படைத்த தாங்கள் எப்படி சுகமாக வாழமுடியும்? அறிஞர்களிடமல்லவா அரசாங்கத்தை ஒப்படைக்கவேண்டும்.

1. அறிஞர்களின் லக்ஷணம்,

சாஸ்திரங்களைக் கற்று ஆத்மஸ்வரூபத்தையும் அனாத்மஸ்வரூபத்தையும் நன்கு உணர்ந்திருப்பவனே அறிஞன் எனப்படுவான். அல்லது அவன் தனக்குள்ள அறிவும் ஆற்றலும் எவ்வளவு? என்பதை நன்கு உணர்ந்திருப்பான். தம் தம் சக்திக்கேற்றவாறே காரியங்களை ஆரம்பிப்பான். முன்யோசனையின்றி ஆரம்பித்துவிட்டு பாதியில் எக்காரியத்தையும் கைவிடான். விஷயங்களில் அதிகப்பற்று வைக்கமாட்டான். மிகப்பொறுமையுடனிருப்பான். தர்மம் நித்தியம், அதற்கு விரோதமாக எந்நாளும் நடக்கலாகாது, என்ற உறுதியுடன் வாழ்க்கையை நடத்திவருவான். சாஸ்திரங்கள் அனுமதித்த காரியங்களையே செய்வான். அவற்றால் தடுக்கப்பட்ட காரியங்களைச் செய்யான். பரலோகம், தெய்வம் இவற்றில் நம்பிக்கையுள்ளவனாக இருப்பான். அவன் செய்யும் காரியங்களையோ, ஆலோசனைகளையோ, அவை முடிவடைவதற்குமுன் யாரும் அறியமுடியாது. சக்திக்கேற்றவாறு காரியங்களைச்செய்ய விரும்புவான். அவ்வாறு விரும்பியதைச் செய்தே தீருவான். எதையும் எக்காரணங்கொண்டும் அவமதிக்கமாட்டான்.

அவன் விரைவில் அறியவேண்டியவைகளை அறிவான். இருந்தாலும் பல அறிஞர்களிடமிருந்து பலதடவை அறிய வேண்டிய விஷயங்களைக் கேட்பான். பிறர் கேட்காதவரை தானாக அவர்களுக்கு எதையும் உரைக்கமாட்டான். உபயோகமற்ற காரியங்களை ஒருபொழுதும் செய்யத்துணிய மாட்டான். தன்னைப் பிறர் போற்றினால் களிப்பையும், தூற்றினால் வெறுப்பையும் அடையமாட்டான். கங்கையின் மடுவில் உள்ள நீர்போல் கலங்காதிருப்பான். நியாய மான விஷயத்தை தங்குதடையின்றி எடுத்துரைக்கும் சக்திவாய்ந்தவனும், உலக நிகழ்ச்சிகளை நன்கு உணர்ந்த வனும், ஸமயோசித புத்தியுள்ளவனும், பேசுந்தருணத் தில் அதற்குச்சான்றாக நூல்களை எடுத்துரைக்கும் திறமை வாய்ந்தவனுமிருப்பான் புத்திக்கேற்ற படிப்பையும், சாஸ் திரங்களை யனுசரிக்கும் புத்தியையும் அவனிடம் காணலாம். பெரியோர்களிடம் மதிப்புவைத்து அவர்களிட்ட கட்டளை யைச்செய்வான். (இவ்விதம் இருப்பவர்களே அறிஞர்கள் (பண்டிதர்கள்) என்றும், இவர்களுடைய ஆட்சியிலேயே குடிகளுக்கு நன்மைகள் ஏற்படும் என்றும் விதுரர் கருதுகிறார்.)

2. மூடர்களின் லக்ஷணம்.

அறிஞர்களின் லக்ஷணங்களைக் குறிப்பிட்டுவிட்டு பிறகு அறிவீனர்களின் (மூடர்களின்) லக்ஷணத்தைக் குறிப்பிடு கின்றார். அவர்களைப்போல் நாம் நடந்துகொள்ளக்கூடாது என்று அறிவுறுத்துவதே இதன் நோக்கம்.

தன் சொந்த காரியங்களைச் சரிவர செய்யாமல் அவற்றை விட்டுவிட்டு பிறர் காரியங்களில் ஈடுபடுகின்றவர்கள் மூடர்கள்,

தன் சொந்த பிரயோஜனத்தைக் கருதாமல் ஒருவன் பிற ருக்கு உபகாரம் செய்வானேயாகில் அவனை "ஸத்புருஷன்" என்று மகாகவி "பர்த்ருஹரி" கூறியுள்ளார். இங்கு அப் படிப்பட்ட மனிதனை மூடன் என்று குறிப்பிடவில்லை. ஒருவன் கட்டாயம் செய்தே தீரவேண்டிய கடமைகள் சில உண்டு. உதாரணமாக தன் பெண், பிள்ளை, பெண்சாதி, தாய், தந்தைகள், இவர்களை அவசியம் இரக்ஷித்தே தீர வேண்டும். அவர்களையெல்லாம் கவனிக்காமல் பிறருக் காகவே ஒருவன் உழைத்துவந்தானேயாகில் அவனைத்தான் "மூடன்" என விதுரர் குறிப்பிடுகின்றார். துர்யோதன னுடைய மாமா சகுனி இதற்குச் சரியான உதாரணமாம்.

மேலும் தன்னிடம் பிரியமில்லாதவர்களை நேசிப்பான். பிரியமுள்ளவர்களை வெறுப்பான். தானே நேரில் செய்ய வேண்டிய காரியங்களை சேவகர்களைக்கொண்டு செய்விப் பான். எல்லா விஷயங்களிலும் யாரிடத்திலும் எப்பொழு தும் சந்தேஹத்துடனேயே பழகுவான். விரைவில் செய்து முடிக்கவேண்டிய காரியங்களை மிகவும் தாமதப்படுத்துவான். தேவர்கள் பித்ருக்கள் இவர்களைப் போற்றமாட்டான் (நாஸ்திகர்களை விதுரர் மூடர்கள் கோஷ்டியில் சேர்த்திருக் கிறார் என்பது இதிலிருந்து தெரியவருகிறது.)

அழைக்கப்படாமலே பிறர் வீட்டிற்குள் நுழைவான். கேட்கப்படாமலே பல வார்த்தைகளை பேசிக்கொண்டிருப் பான். தன்னிடமுள்ள குற்றங்களை கவனிக்காமல் அக்குற்றங் களுடன் கூடிய பிறரை நிந்திப்பான். திறமையற்ற காரணத் தால் திடீரென்று கோபித்துக்கொள்ளுவான். தன்னுடைய சக்தியை அறியாமலே தன்னால் அடையமுடியாத பொருளை விரும்புவான். அவற்றையும் இருக்கும் இடத்தைவிட்டு எழுந்திருக்காமலே அடைய ஆசைப்படுவான்.

பொது நீதிகள்.

இங்கு ஒன்று ஒன்றாகப் பிரித்து சில நீதிகளையும் பிறகு இரண்டு இரண்டாகப் பிரித்து சில நீதிகளையும், இப்மாதிரியே பத்துவரை பல நீதிகளையும் பிரித்துப் பிரித்துக் கூறுகின்றார்.

3. ஒன்று ஒன்றாகக் கூறப்படும் நீதிகள்.

கூட இருப்பவர்களுக்கு அளிக்காமல் உணவை ஒருவனே உண்டு, ஆடையையும் ஒருவனே உடுத்துக்கொள்ளுகின்றவனைவிட துஷ்டன் என வேறு யாரைக் கூறமுடியும் ?

ஒருவன் பாவங்களைச்செய்வான். அதனால் ஏற்படும் சில நன்மைகளைப் பலர் அனுபவிப்பார்கள். ஆனால் பாவத்தின் பயனாகிய நரகம் முதலியவை நன்மைகளை அனுபவிக்கும் பொதுஜனங்களுக்கு சம்பவிக்கமாட்டா. பாவத்தைச் செய்தவனுக்கே அவை ஏற்படும்.

சிறந்த வில்லாளியால் விடப்பட்ட அம்பு ஒருவனைக் கொல்லலாம், அல்லது கொல்லாமல் இருக்கலாம். ஆனால் அறிவாளியின் ஓர் சிறந்த ஆலோசனை எதிரியையும் அவன் இராஜ்யம் முழுவதையுமே அழித்துவிடும்.

ஏகயா த்[3]வே விநிச்சித்ய த்ரீந் சதுர்பி[4]ர் வசே[1]குரு ।
பஞ்ச ஜித்வா விதி[3]த்வா ஷட் ஸப்த ஹித்வா ஸுகீ[2] ப[4]வ ॥

"ஒன்றால் இரண்டை ஜயித்து நான்கினால் மூன்றை வசமாக்கிக்கொள். ஐந்தை ஜயித்து, ஆறை அறிந்து, ஏழை விட்டு சுகமாக இரு" என்று இதற்குப் பொருள் ஏற்படுகிறது. இங்குள்ள ஒன்று, இரண்டு முதலியவற்றை அடியிற்கண்டவாறு உரையாசிரியர்கள் விளக்கியுள்ளார்கள். **ஒன்றால்** — ஒரே உறுதியான புத்தியால், **இரண்டை** — செய்யத்தகுந்தது, செய்யத்தகாதது, இவ்விரண்டையும் (தீர்மானம்

செய்து) **மூன்றை**—சிநேகிதர், விரோதி, சிநேகமுமில்லாமல் விரோதமுமில்லாமல் நடு நிலைமையில் இருப்பவர், இம்மூவரையும், **நான்கினால்**-ஸாம-தான-பேத-தண்டம், என்ற நான்கு உபாயங்களால் (வசமாகச் செய்து) (சிநேகிதனை, ஸாம அல்லது ஸமாதான முறையிலும், விரோதியை, நான்கு உபாயங்களாலும், நடு நிலைமையில் உள்ளவனை, ஸாமத்தாலும் பேதத்தாலும் வசமாகச் செய்யவேண்டும்) **ஐந்தை** — ஐந்து இந்திரியங்களை (ஜயித்து) **ஆறை**—ஸந்தி, விக்ரஹம், யானம், ஆஸனம், த்வைதீபாவம், ஸமாச்ரயணம் என ராஜ நீதியில் கூறப்பட்ட ஆறு உபாயங்களை (அறிந்து) **ஏழை** — ஸ்திரீகளிடம் மோஹம், சூதாட்டம், வேட்டை, குடி, கடுஞ்சொல், கொடிய தண்டனை, பொருளை வீணாக விரயஞ் செய்தல் என்ற ஏழு குற்றங்களையும் (ஒழித்து சுகமாக இரு)

இதற்கு வேறு விதமாகவும் பொருள் கூறலாம். உறுதியான புத்தியால் இது நித்தியம், இது அநித்தியம் என்ற இரண்டையும் தீர்மானம் செய்து, சமம், தமம், உபாரமம், சிரத்தை என்ற நான்குகளால், காமம், குரோதம், லோபம் என்ற மூன்றையும் உனக்கு வசமாகச் செய்துகொள். ஐந்து இந்திரியங்களை ஜயித்து, பசி, தாகம், சோகம் – மோஹம், ஜரை – ம்ருத்யு – என்ற இந்த ஆறையும் அறிந்து அதாவது பசியும் தாகமும், பிராணனைச்சேர்ந்தவை, சோகம் – மோஹம் இவ்விரண்டும் மனதைச் சேர்ந்தவை, ஜரை, ம்ருத்யு இவ்விரண்டும் உடலைச்சேர்ந்தவை, இவையெல்லாம் ஆத்மாவைச் சேர்ந்தவையல்ல என்பதை உணர்ந்து, ஐந்து இந்திரியங்கள், புத்தி – மனஸ் இந்த ஏழையும் தியாகம்செய்து சுகமாக இரு.

இனிமையான வஸ்துவை ஒருவனே தனியாக புசிக்கலாகாது. விஷயங்களை ஒருவனாக ஆலோசிக்கக்கூடாது.

தனியாக வெகுதூரம் நடக்கலாகாது. பலர் தூங்கிக்கொண்டிருக்கையில் ஒருவன் மட்டும் விழித்துக்கொண்டிருக்கலாகாது. சமுத்திரத்தைக் கடக்கக் கப்பல்போல் சுவர்க்கத்திற்குச் செல்ல ஒரே ஒரு சிறந்த படி இருக்கின்றது. அது தான் உண்மை பேசுதல். அதை பலர் அறியவில்லை

பொறுமையுள்ளவர்களிடம் இருக்கும் குற்றம் ஒன்றே ஒன்று தான். அதாவது அவர்களை திறமையற்றவர்கள் என சாமானிய மனிதன் கருதுகின்றான். உண்மையில் இது ஒரு குற்றமாக ஆகாது. பொறுமையே பிராணிகளுக்கு நிகரற்ற பலம். சக்தியற்றவர்களுக்கு பொறுமை ஓர் நற்குணம். சக்தியுள்ளவர்களுக்கு அது ஓர் சிறந்த ஆபரணம். பொறுமையென்னும் கத்தியை கையிலேந்தி நிற்கும் உன்னை துஷ்டர்கள் என்ன செய்யக்கூடும்? உலர்ந்த புல் பூண்டு இல்லாத்தரையில் விழுந்த நெருப்பு தானே அணைந்து விடும். பொறுமையற்றவன் தானும் கெட்டு பிறரையும் கெடுப்பான்.

தர்மம் ஒன்றாலேயே சிறந்த சிரேயஸ்ஸை யடையலாம். பொறுமை ஒன்றாலேதான் சாச்வதமான சாந்தியைப் பெறலாம். அறிவு ஒன்றே அளவுகடந்த திருப்தியை அளிக்கும். அஹிம்ஸை ஒன்றே சுகத்தைத்தரும்.

4. இரண்டு இரண்டாகக் கூறப்படும் நீதிகள்.

கடுஞ் சொற்களைப் பேசாமலிருத்தல், துஷ்டர்களைக் கொண்டாடாமலிருத்தல், இவ்விரண்டையும் பின்பற்றும் மனிதன் இவ்வுலகில் நன்கு விளங்குவான்.

பிறரால் கொண்டாடப்படும் ஒருவனை அதற்குரிய காரணங்களைத் தான் அறியாமலே போற்றிவரும் மூடன்,

பிறர் ஆசைப்படும் பொருளேயே விரும்பும் ஸ்திரீ, இவ்விருவர்களும் சொந்தபுத்தியற்றவர்கள்.

கையில் பொருள் இல்லாமல் பல விஷயங்களில் ஆசை வைப்பது, சக்தியற்றவன் கோபித்துக்கொள்ளுதல் இவ்விரண்டும் கூர்மையான இரு முள்கள்போல் உடலைத் துன்புறுத்துமாம்.

செய்யவேண்டிய காரியங்களேச் செய்யத் தொடங்காமலிருக்கும் கிருஹஸ்தன், எப்பொழுதும் பல காரியங்களே செய்துகொண்டிருக்கும் சன்னியாசி இவ்விருவரும், அவர்களுடைய இந்த விபரீதச் செயல் காரணமாக நன்கு விளங்கமாட்டார்கள்.

சக்தியுடையவனுக இருந்தும் பொறுத்துக்கொண்டிருப்பவன்: ஏழையாக இருந்தாலும் தானம் செய்கின்றவன் இவ்விருவரும் சுவர்க்கத்திற்கு மேற்பட்ட ஸ்தானத்தில் இருப்பவர்கள் எனக் கருதப்படுகின்றனர்.

நியாயமான முறையில் சம்பாதிக்கப்பட்ட பொருளே உத்தமபாத்திரத்திற்கு கொடுக்காமலிருத்தல் (நல்ல விஷயத்தில் செலவு செய்யாமலிருத்தல்) கெட்ட பாத்திரத்திற்குக் கொடுத்தல் இவ்விரண்டும் அதிக்கிரமங்கள். (அடாத செயல்கள்)

தானம் செய்யாத தனிகன், நியமங்களே முறைப்படி அனுஷ்டிக்காத ஏழை, இவ்விருவரையும் கழுத்தில் ஓர் பெரிய கற்பாறையைக் கட்டி சமுத்திரத்தில் தள்ளிவிட வேண்டும். என அடியிற்கண்ட சுலோகத்தில் கூறியுள்ளார்.

த்[3]வாவம்ப[4]ஸி நிவேஷ்டவ்யௌ க[3]லேப[3]த்[4]வா த்[3]ருட[4]ாம் சி[1]லாம் I

த[4]னவந்தமத[3]ாதாரம் த[3]ரித்[3]ரம் சாதபஸ்விநம் II

5. மூன்று மூன்ருகக் கூறப்படும் நீதிகள்.

பிறர் பொருளை அபஹரித்தல், பிறர் மனைவியை நேசித்தல், நல்ல எண்ணமுள்ள சிநேகிதர்களை தியாகம் செய்தல், இந்த மூன்று குற்றங்களும் ஒருவனை அடியோடு அழித்துவிடும்.

நரகத்திற்கு மூன்று வாயிற்படிகள். அவைதான் காமம், குரோதம், லோபம் என்பன. அவற்றில் ஈடுபட்டால் ஆத்மஸ்வரூபம் இருக்குமிடம் தெரியாமலே போய்விடும். ஆதலால் அவற்றை அறவே ஒழித்துவிடவேண்டும்.

6. நான்கு நான்காகக் கூறப்படும் நீதிகள்.

விபவமுள்ள ஒரு கிரஹஸ்தன் அடியிற்கண்ட நான்கு நபர்களுக்கும் பூர்ண வசதியளித்து வீட்டில் வசிக்கும்படி செய்யவேண்டும். (1) வயதான ஒரு ஞாதி. அவன் நமக்கு குலதர்மங்களை உபதேசிப்பான் (2) தற்காலம் கொஞ்சம் சிரமதசையிலிருக்கும் ஓர் உத்தமகுலத்தில் பிறந்தவன். அவன் வீட்டிலுள்ள சிறுவர் சிறுமிகளுக்கு நல்ல ஒழுக்கங்களைக் கற்றுக்கொடுப்பான். (3) ஏழையான ஒரு நண்பன். அவன் நமக்கு நன்மைகளை எடுத்துரைப்பான். (4) குழந்தையில்லாத சகோதரி. அவள் நமது சொத்தை நன்கு இரக்ஷிப்பாள்.

அற்ப அறிவுள்ளவர்கள், விரைவில் செய்யவேண்டியதை தாமதித்துச் செய்கின்றவர்கள், சோம்பேறிகள், வீணைத் துதிக்கின்றவர்கள் இந்நால்வர்களுடன் ஓர் விஷயத்தைக் குறித்து ஆலோசனை செய்யலாகாது.

அக்னிஹோத்ரம், மௌனம், அத்தியயனம், யாகம் இந்நான்கும் முறைப்படி அனுஷ்டிக்கப்பட்டால் மோக்ஷம் வரையில் உள்ள பயனை அளிக்கும். இவற்றையே கௌர

வத்திற்கென்றே முறை தவறி ஆடம்பரமாக அனுஷ்டித்தால் தீங்கையே விளைவிக்கும். தேவதைகளுடைய விருப்பம், மஹான்களுடைய திறமை, அறிஞர்களுடைய விநயம், நாசத்தையளிக்கும் திருட்டு முதலிய செயல்கள், இந்நான்கும் உடனேயே பயனை அளிக்கும்.

7. ஐந்து ஐந்தாகக் கூறப்படும் நீதிகள்.

தாய், தந்தை, அக்னி, ஆத்மா, குரு இந்த ஐவர்களையும் எப்பொழுதும் போற்றவேண்டும். இந்த ஐவரும் "பஞ்சாக்னி" எனக் குறிப்பிடப்பட்டிருக்கின்றனர்.

தேவர்கள், பித்ருக்கள், பெரியோர்கள், சன்னியாசிகள், அதிதிகள், இந்த ஐவரையும் கொண்டாடுகின்றவன் இவ்வுலகில் புகழையடைவான்.

சிநேகிதர்கள், விரோதிகள், நடு நிலைமையிலுள்ளவர்கள், உன்னால் ஆச்ரியிக்கப்படவேண்டிய குரு முதலியவர்கள், உன்னை அண்டுகின்றவர்கள் இந்த ஐவரும், நீ எந்த இடத்திற்குச் சென்றாலும் அங்கெல்லாம் உன்னைத் தொடர்ந்து வருவார்கள்.

கண், காது, மூக்கு, நாக்கு, த்வக், என்ற ஐந்து இந்திரியங்களுடன் கூடிய மனிதன் எந்த ஒரு இந்திரியத்தைச் சரியானபடி பாதுகாக்காமலிருந்தாலும் அதன் வழியாக அவனுடைய புத்தி ஓட்டைப்பாத்திரத்திலுள்ள ஜலம்போல் அழிந்துவிடும். ஆதலால் ஒருவனுடைய புத்தி சரியான நிலையில் இருக்க எல்லா இந்திரியங்களையும் சரியாகப் பாதுகாக்கவேண்டும்.

8. ஆறு ஆறாகப்பிரித்துக் கூறப்படும் நீதிகள்

ஐச்வரியத்தை அடைய விரும்புகின்றவன் அடியிற் கண்ட ஆறு குற்றங்களையும் அடியோடு ஒழிக்கவேண்டும்.

அளவுக்குமிஞ்சின தூக்கம், மயக்கம், அவசியமில்லாத பயம், கோபம், சோம்பல், எக்காரியத்தையும் தாமதமாகவே செய்தல். இந்த ஆறிலும் ஈடுபட்டவர்கள் ஒருநாளும் முன்னேற்றமடையமுடியாது.

சாஸ்திரார்த்தங்களை தெளிவாகக்கூறும் திறமையற்ற ஆசார்யன், குடிகளைக் காப்பாற்றாத அரசன், எப்பொழுதும் பிரியமில்லா வார்த்தைகளைப் பேசும் மனைவி, காட்டிற்குச் சென்று ஆடு மாடுகளை மேய்க்காமல் கிராமத்திலேயே வசிக்கவேண்டுமென்று விரும்பும் இடையன், கிராமத்தில் இருந்து தம் தொழிலை கவனிக்காமல் காட்டில் வசிக்க வேண்டுமென்று கருதும் நாவிதன், இந்த ஆறுபேர்களையும் நம்பினல் ஓட்டைக்கப்பலில் ஏறி சமுத்திரத்தைக் கடக்க விரும்புகின்றவனுடைய கதியே ஏற்படும்.

பிரதிதினம் பொருள் சேர்ந்துகொண்டே இருத்தல், நோவுநொடி இல்லாமை, மனதிற்கு இசைந்தவளாயும் பிரியத்தைப் பேசுகின்றவளுமான மனைவி, தனக்கு அடங்கியிருக்கும் பிள்ளை, பணத்தைத்தரும் படிப்பு இவ்வாறும் இவ்வுலகில் சுகத்தை அளிக்க சாதனங்களாம்.

நல்ல படிப்பு படித்தவுடன் ஏராள வருவாயுள்ள ஓர் உத்தியோகம், உடனே தன் மனதிற்குப் பிடித்த ஓர் பெண்மணியின் லாபம், உசிதமான காலங்களில், அந்தப் பிரிய நாயகியின் இனிமையான சொற்களைக் கேட்கும் பாக்கியம், சரியான சமயத்தில் பிறந்தபிள்ளை தான் சொன்ன வார்த்தையைத் தட்டாமல் தனக்குக் கீழ்ப்படிந்து நடப்பது, பல துறைகளிலும் பிரதிதினம் பணம் வந்துகொண்டே இருத்தல், இவையெல்லாம் ஒருவனுக்கு சம்பவித்தால் இதைவிட இவ்வுலகில் வேறு என்ன சுகமிருக்கிறது.

காமம் — குரோதம், சோகம் — மோஹம், மதம் — அஹங்காரம், என்ற மனதிலுள்ள ஆறு தோஷங்களை ஒருவன் அடக்கிவிட்டால் அவன் எவ்வித பாபங்களையும்

செய்யமாட்டான். எத்துன்பத்திற்கும் உள்ளாகமாட்டான். அவனை ஜிதேந்திரியன் எனவும் அழைக்கப்படுவான்.

ஒரு ஆறு நபர்கள் மற்றொரு ஆறு நபர்களை அண்டியே பிழைத்து வருகின்றனர். அதாவது திருடர்கள் ஏமாந்தவர்களை அண்டியும், வைத்தியர்கள் ரோகிகளை அண்டியும், ஸ்திரீகள் காமுகர்களை அண்டியும், யாகம் செய்துவைக்கின்றவர்கள் யாகம் செய்கின்றவர்களை அண்டியும், அரசர்கள் சண்டைபோடுகின்றவர்களை அண்டியும், அறிவாளிகள் மூடர்களை அண்டியும் பிழைக்கின்றார்கள்.

ஒருவன் ஏமாறாமல் மிக ஜாக்கிரதையாக இருந்தால் அவனிடம் திருடன் என்ன செய்ய முடியும்? ஒருவனுக்கு வியாதி இல்லையென்றால் வைத்தியனுக்கு அங்கு என்ன வேலை, ஆதலால் வியாதி வாராமல் பார்த்துக்கொள்ளவேண்டுமென்பது தான் கருத்து. வைத்தியனை விரட்டிவிடவேண்டுமென்றல்ல. வைத்தியனுக்குக் கொடுப்பதை வாணியனுக்குக்கொடு என்பது பழமொழி. வாணியனுக்குக்கொடுத்தால் சொற்பபணச்செலவு மட்டுந்தான்; வைத்தியனுக்குக்கொடுத்தால் அதிகமான பணத்திற்குச்செலவு, சரீரத்திற்கும் சிரமம். ஒரு ஊரில் வழக்கே இல்லையென்றால் கோர்ட்டுகள் எடுபடவேண்டியவைதான். "மூடர்களை அண்டியே கெட்டிக்காரர்கள் பிழைக்கிறார்கள்" என்று கௌரவர்களையும் பாண்டவர்களையும் குறித்துச்சொன்ன வார்த்தை. மூடர்களுக்கு இராஜ்யத்தை ஆளும் திறமையில்லாததால் அந்த இராஜ்யம் காலக்கிரமத்தில் அறிவாளிகளையடைந்துவிடும். அவ்விதம் செல்லாமல் இருக்க மூடர்கள் தம் அறியாமையைத்தான் ஒழிக்க முயலவேண்டுமல்லாமல் அறிவாளிகளை தூஷிப்பதிலும். திட்டுவதிலும் பயன் இல்லை.

பசுக்கள், பிறரிடம் சேவை, வியவசாயம், மனைவி, வித்யை, தனக்குச் சமமில்லாதவரிடமுள்ள நட்பு இவ்வாறையும், இடைவிடாமல் கவனித்துக்கொண்டே இருக்கவேண்டும். தவறினால் இவையெல்லாம் நசித்துவிடும்.

"மாடோ, பாடோ" என்பது முன்னோர்கள் பழமொழி. அதாவது மாட்டை வாங்கிக் கட்டினால் மட்டும் போதாது. இடைவிடாமல் அதோடு பாடுபடவேண்டும். அப்பொழுதுதான் அதன் பயனைப்பெறலாம்

நிலங்களைக் குத்தகைக்கு விட்டுவிட்டு வருஷக்கணக்கில் அவற்றைத் திரும்பிக்கூடப் பாராமல் நிலச்சுவான்தார்கள் உல்லாசமாக நகரிலேயே காலங்கழித்து வந்தால் "நிலம் உழுகின்றவர்களுக்குத்தான்" என்று முதலில் கூறப்படும். பின்பு அவ்விதமே ஆனாலும் ஆகிவிடும். இதில் ஆச்சர்யம் ஒன்றும் இல்லை என்கிறார் விதுரர்.

வித்யை பயன் உள்ளதாக இருக்கவேண்டுமானால் அதை எப்பொழுதும் பராமரிசித்துக்கொண்டே இருக்கவேண்டும் இல்லையேல் மறந்துவிடும். மிகப் பரிசயமுள்ள ஒரு விஷயத்தை எடுத்துரைப்பதானாலும் விஷயம் அறிந்தவர்கள் பூர்வா லோகனம் செய்யாமல் இருக்கமாட்டார்கள். அதற்காகதான் வேதத்தைப் பிரதிதினம் சொல்லிக்கொண்டே இருக்கவேண்டும் என விதிக்கப் பட்டிருக்கிறது.

விவாஹம் ஆனபிறகு பிரதிதினம் அக்னியை இரக்ஷித்து வரவேண்டும். அதற்காக மனைவிகூடவே இருக்கவேண்டும் என சாஸ்திரங்களின் முடிவு. அந்த முடிவில் பல கருத்துக்கள் அடங்கி இருக்கின்றன. மனைவியின் ஒழுக்கம் கெடாமலிருக்கவேண்டும் என்பதும், அதற்கு முக்ய நோக்கமாகும். " குடிப்பழக்கம், கெட்டவர்களுடன் சேர்க்கை, கணவனை விட்டு பிரிந்திருத்தல் தனியாக தேசாடனம் செய்தல், பகலில் தூங்குதல், அடிக்கடி பிறர் வீட்டில் தங்கி இருத்தல் இவ்வாறும் ஸ்திரிகளைக் கெடுத்துவிடும். " என்கிறார் மனு.

கல்வியைக் கற்றபிறகு சீடர்கள் ஆசிரியர்களையும், மனைவியை அடைந்தபிறகு சிலர் தாயையும், காமஉணர்ச்சி அற்றவன் மனைவியையும், காரியம் முடிந்தபிறகு மேற்படி காரியத்திற்கு உபகரித்தவனையும், சமுத்ரத்தைக் கடந்தபிறகு கப்பலையும், வியாதி சொஸ்தமான பிறகு வைத்தியர்களையும்,

பெரும்பாலும் பலர் அலட்சியம் செய்கின்றார்கள். அது முற்றிலும் தவறு ஒருவர் செய்த உபகாரம் சொற்பமாணு லும் அதை எந்நாளும் மறக்கலாகாது.

நோயற்றவாழ்வு, கடனில்லாமலிருத்தல், சுற்றத்தார் களைவிட்டு தனியாக அயல்நாட்டில் வாசம் செய்யாமலிருத் தல், நல்லமனிதர்களுடன் சிநேகம், சொந்த புத்தியைக் கொண்டு காரியங்களைத் தீர்மானித்து அதன்படி நடத்தல், பயமற்ற வாழ்க்கை, இவ்வாறும் இவ்வுலகில் சுகத்தை யளிக்கக்கூடியவை.

பொறாமையுள்ளவன், அளவுக்கு மிஞ்சியதயையுடைய வன், எவ்வளவு வருமானம் வந்தபோதிலும் சந்தோஷமற் றிருப்பவன், கோபக்காரன், எப்பொழுதும் எல்லாவற்றிலும் சந்தேகப்படுகின்றவன், பிறருடைய பாக்கியங்களை அண்டி பிழைக்கின்றவன், இவ்வாறுபேரும் எப்பொழுதும் துக்கத் தையே அடைவார்கள்.

9. ஏழு ஏழாகக் கூறப்படும் நீதிகள்.

ஸ்திரீகளிடம் அதிகமோஹம், சூதாட்டம், வேட்டை யாடுதல், குடி, கடுஞ்சொல், கொடியதண்டனை, வீண்செலவு, இந்த ஏழு குற்றங்களையும் அனைவரும், முக்கியமாக அரசர் களும் கட்டாயம் வர்ஜிக்கவேண்டும். இந்த தோஷங்களால் மிகப் பிரபலமான பிரபுக்கள்கூட அழிந்துவிடுகின்றனர்.

இதைப்பற்றி அர்த்தசாஸ்திரத்தில் “ வியசன ஸமுத் தேசம் ” என்ற பிரகரணத்தில் விரிவாகக் கூறப்பட்டிருக் கிறது. அதன் சாரம்— “ ஸ்திரீகளிடம் விசேஷமாக ஈடு படுகின்றவன் விரைவில் மூன்றாவது பிரகிருதியாக அதாவது நபும்ஸகனாக ஆகக்கூடும். ஆண் சரீரத்தில் உள்ள சுக்ர நாசமே ஸர்வநாசத்திற்கும் காரணம். குடியால் மதிமயங்கி பல அடாத காரியங்களைச் செய்யக்கூடும். வேட்டையில்

விசேஷமாக ஈடுபடுகின்றவன் ஒருக்கால் யானை, புலி முதலிய துஷ்டமிருகங்களுக்கு இரையாகவும் ஆகலாம். சூதாட்டவெறியனுக்கு செய்யத்தகாதது என்று ஒன்றுமில்லை. வீண் செலவு செய்யும் குபேரன்கூட பிச்சைக்காரனாக ஆகிவிடுவான். அதிகச் செலவும் ஸத்பாத்திரத்தில் கொடுக்கப்படாததும், கெட்டபாத்திரத்தில் கொடுக்கப்படுவதும் வீண் செலவாகவே கருதப்படும்.

10. எட்டுஎட்டாகக் கூறப்படும் நீதிகள்.

பிராம்மணர்களைத் துன்புறுத்தவேண்டும் என நினைத்தல், பிறகு அவ்விதமேசெய்தல், அவர்களுடைய சொத்தை அபகரித்தல், அவர்களைக் கொன்றுவிடவேண்டும் என நினைத்தல், அவர்களை தூஷிப்பதில் விருப்பம், அவர்களுடைய புகழில் வெறுப்பு, எக்காரியத்திலும் அவர்களை நினைக்காமலிருத்தல், அவர்களிடம் இல்லாதக் குற்றங்களை அவர்கள்மேல் வீணாக சுமத்தல் என்ற இந்த எட்டும் “ ஒருவன் விரைவில் அழிந்துவிடுவான் ” என்பதை சூசனம் செய்யும் பூர்வ நிதானங்கள். (பிராம்மணன் அல்லாத ஒருவர்(விதுரர்) இவ்வாறு கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது)

நண்பர்களுடன் சேர்க்கை, ஏராள பொருள் வருமானம், செல்லப்பிள்ளை தன்னைத் தழுவிக்கொள்ளுதல், தம்பதிகள் ஒற்றுமையுடன் இன்பத்தை அனுபவித்தல், சரியான சமயத்தில் பிரியமான வார்த்தையைச்சொல்லுதல், தன் இனத்தார்களுள் மிகப் பெருமையுடன் வாழ்தல், தான் விரும்பியதை அடைதல், ஜனங்களுடைய கூட்டத்தில் கௌரவிக்கப்படுதல் இந்த எட்டும் ஒருவனுடைய சந்தோஷத்திற்கு காரணங்களாம்.

11. ஒன்பது என்றுள்ள நீதி.

ஒன்பது துவாரங்களையுடையதும் வாதம், பித்தம்,

கபம் என்ற மூன்றையும் தூணாக உடையதும், சப்தம் முத லிய ஐந்து சாக்ஷிகளுடன் கூடியதும் ஜீவன் வசிக்கின்றது மான இந்த உடல் ஆகிற வீட்டின் தத்துவத்தை எவன் அறிகின்றானோ அவனே சிறந்த அறிவாளி.

12. பத்தாகக்கூறப்படும் நீதி.

கள் குடித்தவன், கவனம் இல்லாதவன், பைத்தி யம் பிடித்தவன், களைப்புற்றவன், கோபக்காரன், பசி எடுத் தவன், அவசரப்படுகின்றவன், உலோபி, பயங்கொண்டவன், காமவெறி உள்ளவன் இந்த பத்து பேர்களும் தர்மத்தின் தத்துவத்தை உணரமாட்டார்கள்.

13. ஆரியர்களின் சுபாவம்.

சமாதானம் அடைந்த சண்டையை கிளப்பமாட்டான், கர்வத்தை அடையான், எப்பொழுதும் சாந்தமாகவே இருப் பான், "ஏழையாக ஆகிவிட்டேன்" என்ற காரணத்தால் செய்யத்தகாததை செய்யமாட்டான், சுகம் ஏற்பட்டாலும் அளவுக்கு மீறி களிக்கமாட்டான். பிறருக்கு துக்கம் ஏற் பட்டால் அதைக்கண்டு சந்தோஷம் அடையான். கொடுத்து விட்டு பின்பு வருந்தமாட்டான். இதுவே ஆரியர்களின் சுபாவம்.

14. துன்பத்தை அடையாதவர்கள்.

சுற்றத்தார்களுக்கும் அதிதிகளுக்கும் அளித்துவிட்டு மிதமாக புசிக்கின்றவர்களும், அளவுகடந்த காரியத்தை செய்துவிட்டு மிதமாக தூங்குகின்றவர்களும், விரோதிகளா னாலும் யாசித்தார்களேயானால் அவர்களுக்கு கொடுக்கின்ற வர்களும் ஒருபொழுதும் துன்பத்தை அடையமாட்டார்கள்.

15. அநீதி செல்வத்தை அழிக்கும்.

செல்வம் ஏராளமாக இருக்கின்றது என்ற காரணத் தால் நியாயவிரோதமான காரியங்களை ஒருபொழுதும்

செய்யலாகாது. கிழத்தனம் அழகைக் கெடுப்பதுபோல் நீதி தவறி நடப்பது செல்வத்தை அழித்துவிடும்.

16. ஒரு கார்யத்தைச் செய்யுமுன் அதன் விளைவை ஆலோசிக்கவேண்டும்.

தூண்டி முள்ளில் இருக்கும் தின்பண்டத்தை நாடிச் செல்லும் மீன் அதற்குப் பின் ஏற்படுவதை ஆலோசிப்பதில்லை, அதுபோல் எதையும் செய்யலாகாது. எதைப் புசிக்க முடியுமோ, புசித்தாலும் ஜீரணம் ஆகுமோ, ஜீரணம் ஆனாலும் உடலுக்கு நன்மையைத்தருமோ அதையே புசிக்க வேண்டும்.

17. அவசரப்படேல்.

எக்காரியத்திலும் மிகுந்த அவசரத்தைக் கைக்கொண்டால் அது கெட்டுவிடும். ஒரு மரத்தில் காய்கள் காய்த்து இருக்கின்றன என்றால் நமக்கு எவ்வளவு முடையாக இருந்தாலும் அவைப் பழுக்கும்வரை காத்துக்கொண்டுதான் இருக்கவேண்டும். முன்னமேயே பரித்துவிட்டால் அது உண்பதற்கும் உபயோகப்படா. விதைக்கும் தகுதியற்றவைகளாகும். அவற்றை பக்குவமான பிறகு பரித்தால் நாமும் ருசியுடன் புசிக்கலாம், அவற்றிலிருந்து விதைகளையெடுத்து வேறு மரங்களையும் உற்பத்தி செய்யலாம்.

18. தேனீபோல் இரு.

தேனீ மலர்களிலிருந்து தேனை எடுத்துக் குடித்தே ஜீவிக்கிறது. ஆனாலும் மலர்களின் மேனியோ, வாசனையோ, எதற்கும் பங்கம் இல்லாமல் தேனை எடுக்கின்றது. அதுபோல் பிறருக்கு ஹிம்ஸையில்லாமல் அவர்களிடம் இருந்து பொருள்களை சம்பாதிக்க முயற்சிசெய்.

19. மாலைகட்டுகிறவனைப்போல் பழகு.

புஷ்ப புஷ்பம் விசிந்வீத மூலச்சே^{2}த^{3}ம் நகாரயேத் !
மாலாகார இவாராமே ந யத்^{2}ாங்கா^{3}ரகாரக: !!

மாலை கட்டுகிறவன், மரம், செடி இவற்றில் உள்ள புஷ்பங்களை மட்டும்தான் பரிப்பான். வேருடன் வெட்டமாட்டான். கரிக்காக மரத்தைக் கொளுத்துகிறவன் மரத்தை வேருடனேயே வெட்டிவிடுவான். நாம் மாலாகாரனைப்போல் இருக்கவேண்டுமல்லாமல் அங்காரகாரகனை (கரி தயாரிக்கிறவன்)ப்போல் இருக்கலாகாது.

20. தர்மத்தைக் கைவிடேல்.

த⁴ர்மமாசரதோ ராஜ்ஞ: ஸத்³பி⁴: சரிதமாதி⁵த: ।
வஸுத⁴ர் வஸு ஸம்பூர்ணு வர்த⁴தே பூ⁴திவர்த⁴னீ ॥

ஆதிகாலம் முதற்கொண்டு சாதுக்களால் அனுஷ்டிக்கப்பட்ட தர்மங்களைச் செய்துவரும் அரசனுக்கு பூமி பொருள் நிறைந்ததாகவும், மேல்மேலும் செல்வத்தை விருத்தி செய்து கொண்டுமிருக்கும்.

அத³ஸந்த்யஜதோ த⁴ர்மமத⁴ர்மஞ்சாநுதிஷ்ட²த: ।
ப்ரதிஸம்வேஷ்டதே பூ⁴மி: அக்னௌ சர்மாஹிதம் யத²ா ॥

அப்படி தர்மத்தைச் செய்யாமல் அதை விட்டு விட்டு அதர்மத்தைச் செய்துவருகின்றவனுக்கு பூமி நெருப்பில் போடப்பட்ட தோல்போல் சுருங்கிவிடும், அதாவது எவ்வித பயனையும் அளிக்காது.

த⁴ர்மேண ராஜ்யம் விந்தே³த த⁴ர்மேணபரிபாலயேத் ।
த⁴ர்மமூலாம் ச்ரியம் ப்ராப்ய ந ஜஹாதி நஹீயதே ॥

தர்மத்தால் இராஜ்யத்தை சம்பாதிக்கவேண்டும். தர்மத்தினாலேயே அதை பரிபாலனம் செய்யவேண்டும். தர்மத்தால் சம்பாதித்த பொருளை ஒருநாளும் இழக்கமாட்டான்.

அதர்மத்தால் ஏராளப்பொருள் சேருவதாகத் தோன்றலாம். ஆனால் அது நீண்டகாலம் நிற்காது.

அந்யாயோபார்ஜிதம் த்³ரவ்யம் த³ச’வர்ஷாணி திஷ்ட²தி ।
ப்ராப்தே சைகாத³சே வர்ஷே ஸமூலம் ச விநச்’யதி ॥

"அந்நியாயமாக சம்பாதிக்கப்பட்ட பொருள் பத்து வருடமிருக்கலாம். ஆனால் பதினோருவது வருடத்தில் அதற்குமுன் உள்ள பொருளும் சேர்ந்து முழுவதும் அழிந்துவிடும்" என வேறு இடத்தில் காணப்படுகிறது. சில குடும்பத்தினர் பல தலைமுறைகளாக தனிகர்களாக இருப்பதை நாம் காண்கிறோம். வேறு சில குடும்பங்களில் இரண்டொரு தலைமுறைகள் கூட பொருள் தங்குவதில்லை. இதற்குக் காரணம் பலவற்றுள் அப்பொருள் சம்பாதிக்கப் பட்ட மார்க்கமும் ஒன்றாகும்.

21. ஸாராம்சத்தை எடுத்துக்கொள்.

பைத்தியம்பிடித்தவன் உளறினாலும், குழந்தை பிதற்றினாலும், அவற்றுள் ஏதாவது ஸாரமிருந்தால் அதை, பல கற்களின் நடுவில் உள்ள பொன்னைப் பொறுக்கி எடுப்பது போல், ஏற்றுக்கொள்ளவேண்டும்.

22. அரசர்களுக்கு சாரர்களே நேத்திரங்கள்.

பசுக்கள் வாசனையைக்கொண்டு வஸ்துக்களை அறியும். அந்தணர்கள் வேதங்களைக்கொண்டு தத்துவங்களை அறிவர். அதுபோல் அரசர்கள் அந்நியநாட்டில் நிகழ்கின்றவைகளை சாரர்களை (ஒற்றர்களை)க்கொண்டு பார்ப்பர். மற்றவர்கள் கண்களாலேயே பார்த்தாகவேண்டும்.

23. பலமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படிவதே நலம்

கறக்கும்போது உதைக்கும் மாடு பல துன்பங்களை அனுபவித்தே ஆகவேண்டும். அதுவே உதைக்காமல் கறந்தால் அதை யாரும் துன்புறுத்தமாட்டார்கள். நெருப்பில் காய்ச்சப்படாமலேயே வளையும் இரும்புக்கம்பிகள் நெருப்பிலிட்டு காய்ச்சப்படமாட்டா. தானகவே கீழ் நோக்கிவரும் மரக்கிளை யாராலும் வளைக்கப்படமாட்டாது. அதுபோல் பலமுள்ளவனுக்குக் கீழ்ப்படிந்தால் துன்ப

மில்லை. பல முள்ளவனிடம் இந்திரனுடைய அம்சமிருப்பதால் அவனுக்குக் கீழ்ப்படிவதில் யாதொரு குறைவுமில்லை.

24. நல்லொழுக்கமே முக்கியம்:

நல்லொழுக்கமில்லாதவன் உயர்ந்தகுலத்தில் பிறந்தால் மட்டும் போற்றத்தக்கவனாக ஆகமாட்டான். எக்குலத்தில் பிறந்தாலும் நல்லொழுக்கமுள்ளவனாக இருந்தால் அவன் கொண்டாடத்தக்கவனே. ஒழுக்கமில்லாதவனுக்கு ஏராளப் பொருள் இருந்தும் பயனில்லை. அவன் இவ்வுலகில் வாழ்வதுகூட வீண்தான்.

25 மருந்தில்லாத வியாதி.

பிறருடைய ரூபத்தையும், பொருளையும், வீர்யத்தையும், குலத்தையும், சுகவாழ்வையும் கண்டு அசூயைப்படுகின்றவனுக்கு அந்த அசூசயையே ஓர் வியாதியாகும். அதற்கு மருந்தே இல்லாததால் எப்பொழுதும் அந்த வியாதியால் பீடிக்கப்பட்டவனாகவே இருப்பான்.

26 மதமும் – தமமும்.

வித்யாமதம் (நன்றாகப் படித்துவிட்டோம் என்ற அஹம்பாவம்) தனமதம் (ஏராளப்பொருள் இருக்கின்றது என்ற அஹம்பாவம்) அபிஜன மதம் (நற்குலத்தில் பிறந்திருக்கிறோம் என்ற மமதை) என மதம் மூவகைப்படும். இந்த மூன்றுவித மதங்களுள் தனமதம் மிகக் கொடியது. மற்ற மதம்பிடித்தவர்கள் சிலசமயம் விழித்துக்கொள்ளுவார்கள். ஆனால் தனமதம் பிடித்தவன் அந்ததனம் அழிந்தாலும் விழித்துக்கொள்ளுவது அரிது.

வித்யை, தனம், குலம் என்ற மூன்றும் துஷ்டர்களுக்கு மதத்தை உண்டுபண்ணுகின்றன. ஆனால் அவையே சாதுக்களிடமிருந்தால் அவர்களுக்கு தமத்தை உண்டுபண்ணுகின்றன. “தமம்” என்பது மனிதனுக்கு அவசியம் வேண்டிய “அடக்கம்” என்ற ஓர் உயர்ந்தகுணம்.

27. நல்லவர்களுக்கு நல்லவர்களே துணைபுரிவார்கள்.

ஏதாவது ஒருசமயம் ஏதோ ஒரு காரியத்திற்காக நல்லவர்களால் துஷ்டர்கள் யாசிக்கப்பட்டுவிட்டால், அவர்கள் உடனேயே "நம்மால்தான் காரியம் ஆகவேண்டும், நம்முடைய தயவு அன்னியில் காரியமே நடைபெருது' என்றெல்லாம் எண்ணிக்கொள்ளுவார்கள். ஆனால் அவர்களால் காரியம் நடைபெருது. ஆதலால் நல்லவர்களுக்கு நல்லவர்களேதான் உதவிபுரியவேண்டும். துஷ்டர்களுக்கும் நல்லவர்களேதான் கதி.

28. குதிரைகளை அடக்கி ஓட்டவேண்டும்.

மனிதனுடைய உடலே ஒரு தேர். அதில்உள்ள இந்திரியங்களே அந்தத் தேரை இழுத்துச்செல்லும் குதிரைகள். ஜீவனே தேரை ஓட்டுகின்றவன், அவன் மிக கவனத்துடன் இந்திரியங்களாகிற குதிரைகளை நன்றாக பழக்கி அடக்கி வைத்துக்கொண்டிருந்தால் இந்த ஸம்ஸாரமாகிற மார்க்கத்தில் சுகமாகச் செல்லக்கூடும். இல்லையேல் அந்த குதிரைகள் தேரையும் தேர்ப்பாகனையும் விரைவில் அழித்துவிடும்.

உடலில் வாழும் விரோதிகளை அடக்கு.

ஒவ்வொருவருடைய உடலிலும் உள்ள விரோதிகள், ஐந்து இந்திரியங்களாம். அவற்றைக்கொண்டே தன் காரியத்தை சாதித்துக்கொண்டு அவற்றிற்கெல்லாம் தலைமை வகித்துக்கொண்டிருப்பதுதான் மனது. உடலில் உள்ள இந்த ஆறு விரோதிகளையும் ஜயித்தால் வெளியில் உள்ள மற்ற விரோதிகளை ஜயிப்பது மிக சுலபம். இந்த விரோதிகளை ஜயிக்காதவர்கள் பலகஷ்டங்களுக்குள்ளாகி, பெண், பிள்ளை, வீடு, வாசல், பிராணன் இவற்றைக்கூட இழக்க நேரிடும் மிக்க பலவான்கள் என்று பெயர்பெற்ற இராவணன் முதலியவர்கள் அழிந்ததற்கு அவர்கள் உடலிலேயே உள்ள விரோதிகளே முக்கிய காரணம். ஆதலால் அந்த

விரோதிகளைக் கட்டாயம் அடக்கியே தீரவேண்டும் இல்லையேல் அவர்களுக்கு ஆபத்து நிச்சயம்.

மேலும் மேற்படி சத்துருக்களை ஜயிப்பதுடன் அவர்களுக்கு வசமானவர்களுடன் சேராமலுமிருக்கவேண்டும். காய்ந்த கட்டைகளுடன் சேர்ந்த ஈரமான மரங்கள்கூட காய்ந்தவைகளுடன் சேர்ந்த குற்றத்தாலேயே எரிக்கப்படுவதை நாம் காண்கிறோம். அதுபோல் அவர்களுடன் சேர்ந்தால் சேர்ந்தவர்களும் அழிந்துவிடுவர்.

29. துஷ்டர்களிடம் காணமுடியாத சில அரிய குணங்கள்.

அசூயை இல்லாமை, ஒழுக்கம், வாக் – காய – மனச்சுத்தி, சந்தோஷம், பிரியமாகப் பேசுதல், அடக்கம், உண்மை, ஆயாசப்படாமலிருத்தல், சம்பந்தமில்லாத – அனுவசியமான பேச்சு இல்லாமை, கொடை, முதலிய அரிய குணங்களை துஷ்டர்களிடம் காணமுடியாது. கடுஞ்சொற்களாலும் பழிச்சொற்களாலும் சாதுக்களை அவர்கள் ஹிம்சிப்பார்கள். ஆனால் அந்தச் சொற்களைக்கேட்டுப் பொறுத்துக்கொண்டிருக்கும் சாதுக்களுக்குக் குறைவு ஒன்றுமில்லை. தூஷித்தவர்களே பொறுமைசாலிகளுடைய பாவங்களைக் கட்டிக்கொள்ளுவார்கள்.

30. வார்த்தைகளை எண்ணிப்பேசு.

இது ஓர் சிறந்தகுணம் – கண்டபடியெல்லாம் பேசாமல் அடக்கத்துடன் உசிதமாகப் பேசுதல் என்பது சுலபமல்ல. "சள சள" என்று வாயில் வந்தபடி யெல்லாம் பேசிக்கொண்டே இருந்தால் சில சமயம் உண்மைக்கு மாறாகவும், பிறர் மனம் புண்படும்படியாகவும் பேச நேரிடலாம்.

சிலர் தாம் மணிக்காகப்பேசக்கூடும் என்று பெருமையாகப் பேசிக்கொள்கிறார்கள். அம்மாதிரிப் பேச்சுக்களில் கேட்பவர்கள் அறிந்துகொள்ளவேண்டிய விஷயம் மிக அதிகமாக இருப்பது அரிது. ஏனென்றால் அர்த்த புஷ்டி

யுடனும் சமத்காரமாகவும் அதிகமாகப் பேசுவது என்பது சாத்தியமில்லை என உரைக்கிறார் விதுரர்.

அர்த்த[2]வச்ச விசித்ரம் ச ஶ[1]க்யம் ப[3]ஹு பாஷிதம் ||

வாக்கால் ஏற்பட்ட புண் ஆறாது.

கத்தி அம்பு மற்ற ஆயுதங்கள் இவற்றால் நமது உடலிலோ அல்லது மரத்திலோ வெட்டினால் சிறிது காலத்தில் அந்தப்புண் ஆறிவிடும். வாக்கால் ஒருவனுடைய மனதை புண்படுத்திவிட்டால் அது ஆறவே ஆறாது. யாராலும் அதை ஆற்றவும் முடியாது. நாராசம், நாலீகம், முதலிய அம்புகள் மரங்களிலோ, உடலிலோ தைத்தால் அவற்றை எடுத்துவிடலாம். வாக்காகிற அம்பு ஒருவன்மேல் பாய்ந்து விட்டால் அதை எடுக்கவே முடியாது. ஏனென்றால் அந்த அம்பு பிறருடைய மனதில் தைக்கிறது. பிறருடைய மனது நமக்கு புலப்படாதாகையால் அதில் பாய்ந்திருக்கும் வாக்காகிற அம்பையும் நாம் திருப்பி எடுக்க இயலாது. ஆதலால் பிறருடைய மனம் நோவும்படி எந்த வார்த்தையையும் ஒருபொழுதும் சொல்லலாகாது.

31. விநாசகாலே விபரீத பு[3]த்[3]தி[4] :

என்று பெரியோர்கள் கூறுவர். இது துரியோதனன் விஷயத்தில் மிகவும் பொருத்தமானது எனக் கூறுகிறார் விதுரர். அவரவர்களுடைய கர்மாக்களை அனுசரித்து நன்மைகளையோ, தீமைகளையோ தேவர்கள் உண்டுபண்ணுகிறார்கள். ஒருவன் பாபகர்மாவைச் செய்தால் அதன் பயனை அனுபவிக்கும்படி செய்ய முதல் முதலில் தேவர்கள் அவனுடைய பகுத்தறிவைக் கெடுத்துவிடுகிறார்கள். அறிவு கெட்டால் அழிவுகாலமும் சமீபிக்கும். கெட்ட காரியங்களில் ஈடுபடுவான். அநீதியெல்லாம் நீதியென்றே அவனுக்குத் தோன்றும். யார் எவ்விதமாக உபதேசித்தாலும் அவனுடைய மனம் மாறாது. ஆதலால்தான் ஸ்ரீ கிருஷ்ணன், பீஷ்மர்,

துரோணர், வியாஸர், திருதராஷ்டிரன், காந்தாரி முதலியவர்கள் உபதேசித்தும் துர்யோதனனுடைய மனம் மாறவில்லை.

32. ஆர்ஜவம்.

தனக்கென்று ஒரு நியாயம் பிறருக்கென்று ஒரு நியாயம் பேசாமல் எல்லோரிடமும் ஒழுங்காக ஒரேமாதிரியாக நடப்பதையே இங்கு 'ஆர்ஜவம்" என்ற சொல்லால் குறிப்பிடுகின்றார். இது ஒரு மிகச்சிறந்த நற்குணம். தன் மகன் ஒரு குற்றத்தைச் செய்துவிட்டாலோ, அல்லது பிறர் பொருளை அபகரித்துவிட்டாலோ, "சிறு பையன், எதோ செய்துவிட்டான், மன்னிக்கவேண்டியதுதான்" எனப் பேசுவார்கள் சிலர். அதே குற்றத்தைப் பிறர் மகன் செய்துவிட்டால் "சிறியவனாவது, பெரியவனாவது, பொய் சொல்லலாமோ, பிறர் சொத்தைத் தொடலாமோ' என்றெல்லாம் அவர்களே நியாயம் பேசுவார்கள். இவ்விதமில்லாமல் அனைவரிடமும் ஒரேவிதமாக நடந்து கொள்ளுவதுதான் "ஆர்ஜவம்" எனப்படும்.

இந்த குணத்துடன் கூடியவன் மிகச்சிறந்த ஓர் புண்ணியசாலி, ஸமஸ்த தீர்த்தங்களிலும் முறைப்படி ஸ்நானம் செய்வதால் உண்டாகும் புண்ணியத்தைவிட இவனுக்கு புண்ணியம் அதிகம். இந்த குணத்தின் பெருமையை விளக்கும் ஓர் சம்பாஷணையை விரிவாகக் கூறியுள்ளார் விதுரர்.

33. சுதன்வாவும் – விரோசனனும்.

ஒரு சமயம் 'கேசினீ' என்ற அரசகுமாரிக்கு ஸ்வயம் வரம் வைக்கப்பட்டிருந்தது. அப்பொழுது பலர் அவளை மணம்புரிவதற்காக அங்கு வந்தனர். 'சுதன்வா' என்ற பிராம்மணனும், "விரோசனன்" என்ற அசுரனும் அந்த நோக்கத்துடன் அங்கு வந்தனர். அவ்விருவர்களும் அங்கு வந்திருப்பதை "கேசினீ" அறிந்துகொண்டாள். சுதன்வா,

கேசினியிடம் செல்லுவதற்குமுன் விரோசனன் சென்று அவளுக்குமுன் போடப்பட்டிருக்கும் தங்கமயமான ஓர் ஆசனத்தில் உட்கார முயன்ருன். அப்பொழுது கேசினீ ஏ விரோசனு ! அந்தணர்கள் சிறந்தவர்களா ? அசுரர்கள் சிறந்தவர்களா ? இந்த ஆசனத்தில் சுதன்வா என்ற அந்தணர் ஏன் உட்காரலாகாது?

விரோசனன் :— நாங்கள் காசியபருக்கு புத்திரர்களாகத் தோன்றியவர்கள், ஆதலால் அனைவரையும்விடச் சிறந்த ஸாதுக்கள். உலகம் எல்லாம் எங்களைச் சேர்ந்தவையே. தேவர்களாவது ! அந்தணர்களாவது ! அவர்களுக்கு என்ன மஹிமை இருக்கிறது ?

கேசினீ :— இதே இடத்தில் நாளையதினம் காலையில் சுதன்வாவையும் தங்களையும் சேர்ந்தாற்போல் சந்திக்கிறேன். அப்பொழுது இவ்விஷயத்தை முடிவுசெய்து கொள்ளுவோம்.

மறுநாள் காலையில் விரோசனனும் கேசினியும் தனித்தனி ஆசனத்தில் அமர்ந்திருக்கையில் சுதன்வா அவ்விடம் வந்துசேர்ந்தார். அவரைக்கண்டதும் கேசினீ எழுந்திருந்து அர்க்கியம், பாத்யம் முதலியவற்றைக் கொடுத்து உபசரித்தாள். ஆனல் விரோசனன் மட்டும் எழுந்திருக்காமலே அவன் உட்கார்ந்துகொண்டிருந்த ஆசனத்திலேயே சேர்ந்தே உட்காரும்படி சுதன்வாவை வேண்டினன்.

சுதன்வா :— தகப்பனும் – பிள்ளையும், இரு க்ஷத்திரியர்களும், இரு அந்தணர்களும் சேர்ந்து ஒரே ஆசனத்தில் உட்காரலாமல்லாமல் க்ஷத்திரியனும் – அந்தணனும் சேர்ந்து ஒரு ஆசனத்தில் உட்காரலாகாது.

விரோசனன் :— ஆம் ! என்னுடன் சேர்ந்து நீர் உட்காரத்தான் கூடாது நீர் பலகையிலோ, தர்ப்பாஸனத்திலோ உட்காருவதற்குத் தகுதியுடையவரல்லாமல் இந்த

உயர்ந்த ஆசனத்தில் உட்காரலாமா! என ஏளனமாகப் பேசினான்.

சுத :— அடே விரோசன! நீ விஷயமறியாதவன். உன் தகப்பனார்கூட நான் உயர்ந்த ஆசனத்தில் உட்கார்ந்திருக்கையில் கீழே உள்ள ஒரு ஆசனத்தில் உட்காருவதே வழக்கம். வீட்டில் செல்லமாக வளர்க்கப்பட்ட உனக்கு என்ன தெரியும்?

விரோச:— வீண்வாதம் எதற்கு? நீர் சிறந்தவரா? நான் சிறந்தவனா என்பதை விஷயமறிந்தவர்கள் மூலம் தீர்த்துக் கொள்ளுவோம். இதற்காக என்னிடமுள்ள சொத்து முழுவதையும் நான் பந்தயமாக வைக்கிறேன் நீர் சிறந்தவர் என்று தீர்ந்துவிட்டால் அந்த சொத்து முழுவதும் உம்மையே சேரட்டும்

சுத :— உன் சொத்து எனக்குத் தேவையில்லை. நாம் இருவரும் நம்முடைய உயிரையே பந்தயமாக வைப்போம்.

விரோச :— ரொம்ப சரி, அப்படியே செய்வோம். நம் விஷயத்தைத் தீர்த்துக்கொள்ள யாரை மத்தியஸ்தராக வைத்துக்கொள்ளலாம். தேவர்களிடமோ, மனிதர்களிடமோ எனக்கு நம்பிக்கையில்லை.

சுத :— உன் தகப்பனாகிய பிரஹ்லாதனையே மத்யஸ்தராக வைத்துக்கொள்ளுவதில் எனக்கு ஆக்ஷேபமில்லை. பிள்ளைக்காக அவர் ஒருநாளும் பொய்சொல்லமாட்டார்.

இவ்விதம் அவ்விருவரும் உடன்படிக்கை செய்து கொண்டு பிரஹ்லாதனிடம் சென்றார்கள்

பிரஹ்லாதன் :— " விரோசனனும் சுதன்வாவும் ஸர்ப்பங்கள்போல் கோபித்துக்கொண்டு மிக விரைவில் வந்து கொண்டிருக்கின்றனர். இவ்விருவரும் இதற்குமுன் இது போல் சேர்ந்து ஒரே மார்க்கமாக வந்ததில்லை. இப்பொழுது எக்காரணம்பற்றி இவ்வாறு வருகின்றார்கள் என விரோ

சனைக்கேட்டு தெரிந்துகொள்ளுகிறேன்” எனக்கருதி விரோசனு? சுதன்வாவுடன் உனக்கு சிநேகம் உண்டா? என வினவினன்.

விரோசனன் :— சுதன்வாவுடன் எனக்கு சிநேகம் கிடையாது. தற்காலம் நாங்கள் இருவரும் எங்களுடைய பிராணன்களைப் பந்தயமாக வைத்து ஓர் பிரச்னையைத் தீர்த்துக்கொள்ள தங்களிடம் வந்துகொண்டிருக்கிறோம். அதில் தாங்கள் உண்மையையே சொல்லவேண்டும். பொய்யே கூடாது.

பிரஹ்லாதன் சுதன்வாவைக் கண்டதும் அவரை உபசரிக்க அர்க்கியம், பாத்யம், மதுபர்க்கம் முதலியவற்றைக் கொண்டுவரும்படி சேவகர்களுக்கு உத்தரவிட்டான்.

சுதன்வா:— பிரஹ்லாதா! எங்களுடைய கேள்விக்குச் சரியான பதிலை உரைத்தாலே அர்க்கியம் முதலியவற்றை எனக்கு அளித்து உபசரித்ததாக ஆகிவிடும். ஆதலால் அதற்கே முதலில் பதில் உரை. அதாவது பிராம்மணர்களாகிய நாங்கள் சிறந்தவர்களா? அல்லது விரோசனன் சிறந்தவனு?

பிரஹ்லாதன் :— ஸ்வாமின்! எனக்கோ ஓரே பிள்ளை, பிராம்மணேத்தமரான தாங்களோ நேரில் அவனுடன் விவாதத்தில் கலந்துகொண்டிருக்கிறீர்கள். இப்படி இருக்க நான் இந்தக் கேள்விக்கு எப்படி பதிலுரைப்பேன்?

சுதன்வா :— உனக்கு ஓரே பிள்ளை யென்றால் அவனுக்கு வேண்டியபொருளைக் கொடுத்து அவனிடமுள்ள பிரியத்தைக் காண்பிக்கலாம். ஆனல் அவனும் மற்றொருவனும் விவாதம் செய்யுங்காலத்தில் நீ உண்மையையே பேசவேண்டும்.

பிரஹ்லாதன் :— இம்மாதிரி சந்தர்ப்பங்களில் உண்மையையோ அல்லது அதற்கு மாறுகவோ சொல்லாமல் ஏதோ

ஒருவிதமாக நியாயமற்றவார்த்தைகளை ஒருவன் உரைப்பானேயாகில் அவன் எவ்வித துக்கத்தை அனுபவிப்பான் ?

சுதன்வா :— ஒரு ஸ்திரீ இருக்கும்பொழுது அவளைத் தள்ளிவைத்துவிட்டு மற்றொரு ஸ்திரீயை ஒருவன் மணந்து கொண்டால் அந்தத் திருமணம் நடந்த இரவு முதல்தாரத்தின் மனம் எவ்வித துக்கத்தை அனுபவிக்குமோ அவ்வித துக்கத்தை பொய்சாக்ஷி சொல்லியவன் அனுபவிப்பான். மேலும் சூதாட்டத்தில் எல்லாப்பொருளையும் இழந்துவிட்டு தவிப்பவனும், தாங்கமுடியாத சுமையை தலையில் வைத்துக் கொண்டு கடும் வெய்யிலில் நடக்கும்படி துரத்தப்பட்டவனும், நகரத்திலிருந்து பஹிஷ்காரம் செய்யப்பட்டு வெளியில் நின்றுகொண்டு "பசி பசி' என்று பறந்துகொண்டு அடிக்கடி தன் விரோதிகளைப் பார்த்துக்கொண்டிருப்பவனும், எவ்வித துக்கத்தை அனுபவிப்பார்களோ, அதை பொய் சாக்ஷி சொல்லியவனும் அனுபவிப்பான்.

ஆடு முதலிய பிராணிகளை உத்தேசித்துப் பொய் சொன்னால் ஐந்து முன்னோர்களையும், பசுவை உத்தேசித்துப் பொய்சொன்னால் 10 முன்னோர்களையும், குதிரையை உத்தேசித்துச் சொன்னால் 100 முன்னோர்களையும் மனிதனை உத்தேசித்து பொய்சொன்னால் 1000 முன்னோர்களையும், ஸ்வர்ணத்திற்காகப் பொய்சொன்னால், முன்பிறந்தவர்களையும் பின்பு பிறக்கப்போகின்றவர்களையும், நல்ல லோகத்திலிருந்து நழுவும்படி செய்துவிடுகிறான். பூமிக்காக பொய் சொல்லுகின்றவனுக்கு எல்லாம் அழிந்துவிடும். கேசினீ பூமிக்கு ஒப்பானவள். ஆதலால் அவளுக்காக நீ பொய்சொல்லாதே.

அதைக்கேட்டதும் பிரஹ்லாதன் விரோசனனைப் பார்த்துக் கூறினான். "விரோசனா ! சுதன்வாவின் பிதாவான அங்கிரஸ் என்னைவிட மிகச் சிறந்தவர். சுதன்வா உன்னைவிட பல அம்சங்களிலும் சிறந்தவர்தான். சுதன்வா

வின் தாயும் உன் தாயைவிட மிகச் சிறந்தவள். ஆகவே எல்லாவிதத்திலும் நீ தோற்றுப்போய்விட்டாய். உன் பிராணன் இனி சுதன்வா கையில்தான் இருக்கிறது'' எனக் கூறிவிட்டு சுதன்வாவைப் பார்த்து "ஏ சுதந்வர்! தயவு செய்து தாங்கள் விரோசனனுக்குப் பிராணதானம் செய்ய வேண்டும்.'' என வேண்டிக்கொண்டான்.

சுதன்வா :— பிரஹ்லாதா? நீ இப்பொழுது உண்மையைச் சொல்லிவிட்டாய். பிள்ளையிடம் உள்ள பிரியத்தால் பொய்யைச் சொல்லவில்லை. ஆதலால் உன் பிள்ளைக்குப் பிராணதானம் செய்திருக்கின்றேன். அதுமட்டுமல்ல. என் முன்னிலையிலேயே கேசினியின் பாதங்களில் விரோசனன் மஞ்சளையிடட்டும். அதாவது கேசினியையும் விரோசனனே மணந்துகொள்ளட்டும். (விவாஹ காலத்தில் தம்பதிகள் நலங்கிடும்பொழுது பாதங்களில் பரஸ்பரம் மஞ்சள் பூசுவது வழக்கமாதலால் அதையே இங்கு குறிப்பிடுகின்றார்.)

விதுரர் :— ஆதலால் ஏ திருதராஷ்டிரா! மனிதன் எக்காலத்திலும் யாரிடத்திலும் உண்மையையே பேசவேண்டும். பிள்ளைக்காக தாங்கள் பொய் சொல்லும்பக்ஷத்தில் தங்களுக்கு எல்லாம் அழிந்துவிடும்.

34. அவசியம் வர்ஜிக்கவேண்டியவைகள்.

மத்யபானம், வீண் கலஹம், ஒரு இனத்தைச்சேர்ந்த அனைவருடனும் த்வேஷம்: தம்பதிகளைப் பிரித்துவைத்தல், ஞாதிகளின் ஒற்றுமைக்கு பங்கம் விளைவித்தல், இராஜத்வேஷம், ஸ்திரி புருஷர்களுக்குள் சண்டையை உண்டுபண்ணுதல், பொதுவாக எல்லாவற்றிலும் கெட்டமார்க்கம், இவற்றையெல்லாம் அறவே ஒழித்துவிடவேண்டும். ஏ திருதராஷ்டிரா! தாங்கள் தற்காலம் வீண்கலஹத்திலும், ஞாதிகளுள் ஒற்றுமையைக் கெடுப்பதிலும் ஈடுபட்டிருப்பது முற்றிலும் தகுதியற்ற காரியமாகும்.

35. சாக்ஷிகளாக ஏற்றுக்கொள்ளத்தகாதவர்கள்.

(1) கைரேகை முதலியவற்றைப் பார்த்துக் குறி சொல்லுகின்றவன் (2) முதலில் திருடனாக இருந்து பின்பு வியாபாரியாக ஆனவன், அல்லது, ஒழுங்கற்ற தராசு, படிக் கல்கள் முதலியவற்றை உடையவன் (3) குச்சிகள், கயிறுகள் முதலியவற்றால் சகுனங்களைச் சொல்லி பிறரை ஏமாற்று கின்றவன், (4) வைத்தியன், (5) எதிரி, (6) சிநேகிதன், (7) கெட்ட ஒழுக்கமுள்ளவன், அல்லது நடிகைக்கு தாஸன், விடன், பாடகன், இந்த ஏழு நபர்களையும் சாக்ஷிகளாக அங்கீகரிக்கலாகாது ஏ அரசே! சகுனி ஏழாவதாகக் கூறப்பட்ட கெட்ட ஒழுக்கமுள்ளவன். அவன் சொல்லு வதை நம்பிக்கொண்டிருப்பது சரியல்ல.

36: எவர் நண்பர்கள் ?

பலர் தம் சொந்தகாரியம் ஆவதின் பொருட்டு நம்மிடம் பிரியமாகப் பேசிக்கொண்டிருப்பார். நாம் செய்யவேண்டிய காரியங்களைக்கூட அவர்கள் தாமே செய்ய முன்வருவார்கள். இதனால் அவர்களை "ஆப்த நண்பர்கள்" என எண்ணக் கூடாது. நண்பர்களுடைய சுவபாவத்தையும் விரோதி களுடைய சுவபாவத்தையும் நமக்கு சங்கடம் ஏற்படுங்காலத் தில்தான் சரியாக உணரமுடியும். உண்மையான நண்பர் களாக இருந்தால் அக்காலத்தில் உதவிசெய்ய முன்வருவார் கள்.

37. யார் தார்மிகன் ?

ஒருவனிடமுள்ள ஒழுக்கத்தால் அவன் தார்மிகனா, அதார்மிகனா! என்பதை நாம் அறிந்துகொள்ளவேண்டும். பொய், திருட்டு, அனாசாரம் இவற்றில் ஈடுபட்டவன், "தனக்கு தர்மத்தில் விருப்பமுண்டு" எனக் கூறினால் அதை நம்பலாகாது.

38 யார் தைரியசாலி?

அதிக பயம் ஏற்பட்ட காலத்தில் ஒருவனிடமுள்ள சூரத்தன்மையையும், பணநெருக்கடியில் ஏற்பட்ட துன்ப காலங்களில் ஒருவனுடைய தைரியத்தையும் நாம் உணரலாம்.

39. அஹங்காரம் – மமதை.

கிழத்தனம் அழகை அழித்துவிடும். ஆசை தைரியத்தை இழக்கச்செய்யும். மிருத்யு பிராணனைக்கொண்டுபோவான். அசூயை அல்லது நற்குணங்களில்கூட குற்றத்தையே எடுத்துரைக்கும் தன்மை, தர்மானுஷ்டானத்தைக் கெடுத்துவிடும். ஸத்யம், அஹிம்ஸை, தயை முதலிய நற்குணங்களை ஒருவன் கைக்கொண்டிருந்தால் அவற்றைப் போற்றுவதை மன்னியில் தூஷிக்கவும் ஆரம்பித்துவிடுவர் சிலர். அப்படிப் பட்ட சுபாவமுடையவர்கள் ஒருநாளும் ஸ்வயம் தர்மானுஷ்டானத்தில் ஈடுபடமாட்டார்கள். கோபம் ஐச்வர்யத்தை அழித்துவிடும். துஷ்டர்களின் சேர்க்கை காலக்கிரமத்தில் நல்லொழுக்கத்தை கபளீகரம் செய்துவிடும். காமம் லஜ்ஜையை அபகரித்துவிடும் ஸ்திரீயிடம் உள்ள காமத்தாலோ, அல்லது பொருள் ஆசையாலோ, வெட்கத்தைவிட்டு பல அக்கிரமகாரியங்களைச் செய்ய பலர் முன் வருவதை நாம் காண்கிறோம். இவ்விதம் சில தீயகுணங்கள் சில நல்ல குணங்களை அழிக்கின்றன. ஆனால் "நான்" என்ற அஹங்காரமும், மமதையும், எல்லாவற்றையும் அழித்துவிடும். ஆதலால் அஹங்காரமும் மமகாரமும் எல்லாவற்றையும்விட மிகக்கொடிய தீயகுணங்கள்.

40. உறுதியற்றவனுக்கு ஒன்றுமில்லை.

கோபக்காரனுக்கு பணம் சேராது. தயையற்றவனுடன் யாரும் சிநேகம் கொள்ளமாட்டான் துஷ்டனுடன் மனைவி பிரியமாகப் பழகமாட்டாள். சுகவாழ்க்கையில்

ஈடுபட்டவனுக்கு அறிவுவளர்ச்சியடையாது. காமாதுரனுக்கு வெட்கமிராது. சோம்பேறிக்குப் பொருள் கிட்டாது. உறுதியற்ற எண்ணங்கொண்டவனுக்கோ ஒன்றும் கிட்டாது. ஒரே விஷயத்தில் காலையில் ஒருவிதமான எண்ணம், நடுப்பகலில் வேறுவிதமான அபிப்ராயம், மாலையில் அதற்கு மாறுப்பட்ட கொள்கை, இவற்றுடன் ஒருவன் இருந்தால் அவன் எதையும் சாதிக்கமுடியாது. அவனுடன் பிறர் பழகுவதும் கஷ்டம்.

41. செல்வம் நிலைபெறும் முறை

மங்களகரமான காரியங்களைச் செய்வதால் செல்வம் உண்டாகும். சாமர்த்தியத்தால் அது வளர்ச்சியடையும். சுறுசுறுப்பாக காரியங்களை கவனித்துவருவதால் அது நிலைபெற ஆரம்பிக்கும். அடக்க ஒடுக்கத்துடன் இருப்பதால் அது நன்முக வேரூன்றிவிடும்.

42. சுவர்க்கத்திற்கு எட்டு மார்க்கங்கள்.

யாகம், அத்தியயனம், தானம், தவம், ஸத்யம், பொறுமை, தயை, உலோபியாக இல்லாமை, இவை எட்டும் சுவர்க்கத்திற்குச்செல்லும் மார்க்கங்கள். அதாவது, இவற்றைச் சரிவர அனுஷ்டித்தால் சுவர்க்கத்திற்குச் செல்லக் கூடும் என்பது கருத்து.

இவற்றுள் முதலாவதாகக்கூறப்பட்ட நான்கும் (யாகம், அத்தியயனம், தானம், தவம்) புகழுக்காகவோ, பொருளுக்காகவோ டாம்பிகமாக சாமானிய மனிதர்களாலும் அனுஷ்டிக்கப்படலாம் அவ்வாறு அனுஷ்டிக்கப்பட்டால் அவற்ருல் சுவர்க்கத்தை அடையமுடியாது. அவ்வாறு அனுஷ்டிக்கின்றவர்களை மஹான்கள் என்றும் கருதலாகாது. உண்மையான பக்திசிரத்தையுடன் புகழுக்கோ, பொருளுக்கோ ஆசையன்னியில் அவற்றை அனுஷ்டிப்பவர்கள் மஹான்கள் என்பதில் ஐயமில்லை.

பின்னால் கூறப்பட்ட ஸத்யம், பொறுமை, தயை, உலோபியாக இல்லாமை இந்த நான்கும் மஹான்களைத் தவிர வேறு யாரிடமும் இரா.

43. பாவத்தைச்செய்யாதே; புண்ணியத்தைச்செய்.

ஒரு தடவை பாவச்செயலில் ஈடுபட்டால் அது நல்ல அறிவைக் கெடுத்து மறுபடியும் பாவத்தைச் செய்யவே தூண்டும். ஆதலால் பாவத்தை ஒருபொழுதும் எக்காரணம் பற்றியும் செய்யலாகாது. புண்ணிய காரியத்தில் ஈடுபட்டால் அது நல்ல அறிவைக்கொடுத்து, மறுபடியும் புண்ணிய காரியத்திலேயே ஈடுபடச்செய்யும். ஆதலால் எப்படியாவது புண்ணியகரமான காரியத்தைச் செய்ய முயலவேண்டும்.

44. இரவில் சுகமாக இருக்கவேண்டுமென்றால் பகலிலேயே அதற்கு வேண்டிய காரியங்களைச் செய்துகொள்ள வேண்டும். மழை காலத்தில் சுகமாக வாழ்வதற்கு வேண்டிய காரியங்களை மற்ற எட்டு மாதங்களிலே செய்துவைத்துக் கொள்ளவேண்டும். வயது முதிர்ந்த காலத்தில் கஷ்டப்படாமலிருப்பதற்கு யௌவன காலத்திலேயே உழைக்க வேண்டும். அதுபோல் ஜன்மாந்தரத்தில் சுகமாக வாழ்வதற்கு சாதனமான காரியங்களை இந்த ஆயுள் உள்ளவரை செய்தே தீரவேண்டும்.

45. அதர்மமார்க்கத்தில் பொருளை சம்பாதிக்கவேண்டாம்.

அதர்மமார்க்கத்தில் பொருளை சம்பாதித்தால் அதனால் அக்காலத்தில் உள்ள சில துன்பங்களை அப்பொருளைக் கொண்டு போக்கிக்கொள்ளலாம். ஆனால் அத்துன்பங்கள் நீங்கியவுடன் வேறுவிதமான துன்பங்கள் மூளக்கூடும். ஆதலால் தர்மமார்க்கத்திலேயே பொருளைச் சம்பாதிக்க முயற்சிக்கவேண்டும். துர்யோதனன் அந்நியாயமாக பொருளை சம்பாதிக்க விரும்புகிறான். அதனால் அவன்

சுகத்தை அடையமுடியாது. என்பதை இங்கு விதுரர் எடுத்துக்காட்டுகிறார்.

46. ஒற்றுமையுடன் வாழவேண்டும்.

மரம் மிகப் பெரியதாஞலும் தனியாக இருந்தால் ஒரு பெருங்காற்று அதை வேருடன் பிடுங்கித் தள்ளிவிடும். பல மரங்கள் சேர்ந்து அடர்ந்திருந்தால் அவை பெருங்காற்றை எளிதில் தடுத்துவிடும். அதுபோல் பாண்டவர்களும் கௌரவர்களும் சேர்ந்து ஒற்றுமையாக வாழ்ந்தால் உலகில் எந்த எதிரியும் அவர்களை வெல்லமுடியாது. இருவர்களும் சுகமாக வாழலாம்.

திருதராஷ்டிரர் :— விதுரா ! நீ சொல்லுவதெல்லாம் மிகவும் நன்ருகத்தான் இருக்கிறது. அவை எல்லாவற்றையும் நான் பூர்ணமாக ஒப்புக்கொள்ளுகிறேன். ஆஞல் துர்யோதனனை நினைக்குங்காலத்தில் அவனிடமுள்ள தனிப்பட்ட பிரீதியால் என் புத்தியே மாறிவிடுகின்றதே ! நான் என்ன செய்யலாம்.

யக்ஷப் பிரச்னம்.

முன் வரலாறு.

பாண்டவர்கள் 'த்வைதவனம்' என்ற காட்டில் வசித்து வருகையில் ஒரு சமயம் ஒரு பிராம்மணன் அரணிக்கட்டைகளையும், அக்னிக்காக அவற்றைக் கடையும் மத்தையும் ஒரு மரத்தில் மாட்டி வைத்திருந்தான். அதே மரத்தில் ஒரு மான் தன் தினவைத் தீர்த்துக்கொள்ள உராய்ந்தது. அந்தக் கட்டைகளும், மத்தும் அதன் கொம்பில் மாட்டிக் கொண்டன. உடனே அந்த மான் அக்கட்டைகளுடனேயே வெகுதூரம் விரைந்து ஓடிவிட்டது. அக்கட்டைகள் இல்லையேல் அந்த பிராம்மணன் வழக்கம்போல் யாகங்களை அனுஷ்டிக்க இயலாது. ஆதலால் பாண்டவர்களையண்டி அந்த மானிடமிருந்து அந்தக் கட்டைகளைத் திரும்பப் பெற்று தமக்கு அளிக்கவேண்டுமென வேண்டிக்கொண்டான். அதற்கிணங்கி பாண்டவர்கள் வில்லும் கையுமாகப் புறப்பட்டு கானகத்தில் வெகுதூரம் சென்றனர். ஆனால் அந்த மான் காணப்படவில்லை. அப்பொழுது பசியும் தாகமும் அவர்களை மிகவும் பீடித்தன. களைப்புற்று ஓர் ஆலமரத்தடியில் அமர்ந்து " சமீபத்தில் உள்ள குளத்திற்குச் சென்று நீயும் நீரை அருந்தி எங்களுக்கும் கொண்டுவா " எனக்கூறி நகுலனை அனுப்பினர். அவனும் அக்குளத்திற்கு விரைந்தோடி நீரைக் குடிக்க அக்குளத்தில் இறங்கினான். " தண்ணீரைக் குடிக்காதே ! குளம் என்னுடையது. என்னுடைய கேள்விகளுக்கு பதில்களைச் சொல்லிவிட்டு நீரை நீயும் குடி. எடுத்தும் செல் " என ஆகாயத்திலிருந்து ஓர் குரல் கேட்டது. பொறுக்கமுடியாத தாகத்தால் அதை இலக்ஷியம் செய்யாமல், குளத்தில் உள்ள குளிர்ந்த நீரை அருந்தினான் நகுலன்.

உடனே அந்த ஜலக்கரையிலேயே விழுந்து மாண்டான். வெகுநேரம் வரை நகுலன் திரும்பி வராததால் அவனைத் தேடிக்கொண்டு ஸஹதேவன் சென்றான். அதே குரலை அவனும் கேட்டான். நகுலனைப் போலவே அதை இலக்ஷியம் செய்யாமல் நீரைக்குடித்து அவனும் மாண்டான். பிறகு அர்ஜுனனும் பீமனும் சென்று முன் சென்றவர்களைப் போலவே மாண்டனர். கடைசியில் தருமபுத்திரர் சென்றார். அதே குரலை அவரும் கேட்டார். கீழே இறந்து கிடக்கும் தன் சகோதரர்களைக் கண்டு பலவாறாக வருந்தினார். பிறகு தைரியத்துடன் வீராதி வீரர்களான நமது சகோதரர்களைக் கொன்றவர் யாராக இருக்கலாம், என்று ஆலோசித்துக்கொண்டே நான்கு பக்கங்களிலும் பார்த்தார். மரத்தின்மேல் வீற்றிருக்கும் ஓர் பெரிய கொக்கைக் கண்டார். "நீர் யார்? உமக்கு எங்களால் ஆகவேண்டியதென்ன? உம்மைக் கண்டதும் என் மனம் நடுங்குகிறது. உண்மையைத் தெரிவிக்கவேண்டும்" என அக்கொக்கை நோக்கி வினவினார் தருமர். "நான் சாமானிய கொக்கல்ல. நான் ஓர் யக்ஷன். நான்தான் உன் சகோதரர்களைக் கொன்றேன். என் குளத்தில் நான் கேட்ட கேள்விகளுக்கு பதில்களை உரைக்காமல் தண்ணீர் குடிக்கக்கூடாது என்ற என் வார்த்தையை இலக்ஷியம் செய்யாமல் அவர்கள் குடித்தனர். ஆதலால் அவர்களைக் கொன்றுவிட்டேன். நீயும் தண்ணீர் குடிக்க விரும்பினால் என்னுடைய கேள்விகளுக்குப் பதில்களை உரைக்கவேண்டும்" என கொக்குருவங்கொண்ட அந்த யக்ஷன் பதில் உரைத்தான். "கேள்விகளைக் கேளுங்கள். எனக்குத் தெரிந்தவரை பதில் சொல்லுகிறேன்" என தருமர் கூற அந்த யக்ஷன் பல கேள்விகளைக் கேட்கின்றான்.

அந்த கேள்விகளுக்குத்தான் 'யக்ஷப்பிரச்னம்' என்று பெயர். தர்மராஜனே தரும புத்திரருக்கு உள்ள தர்ம

அறிவை பரீக்ஷிப்பதற்காக யக்ஷன் உருவத்தில் அங்கு தோன்றினான். தர்மத்தின் அம்சமாகிய தருமபுத்திரர் அக்கேள்விகளுக்குச் சரியான விடைகளையளித்தார். கேள்வி கேட்டவர் தர்மராஜன். பதில் அளித்தவர் தரும புத்திரர் என்றால் அக்கேள்விகளிலும், பதில்களிலும் அடங்கியிருக்கும் கருத்துக்கள் எப்படிப்பட்டவைகளாக இருக்கும் என்பதை நாம் ஒருவாறு ஊகித்துக்கொள்ளலாம்.

"இக்கேள்விகளும் பதில்களும், ஆத்ம ஞானத்திற்கு பல சாதனங்களை எடுத்துரைத்து அதன்மூலம் ஆத்ம தத்துவத்தை நிர்ணயம் செய்வதற்காக ஏற்பட்டவை. ஆதலால் பல கேள்விகளும் பதில்களும் அதற்கேற்றவாறு விளக்கப் படும்" என நீலகண்ட உரையில் கூறப்பட்டிருக்கிறது.

கேள்விகளும் — பதில்களும்.

1. கேள்வி. சூர்யனை உதிக்கும்படி செய்கின்றது எது ?

பதில். பரப்பிருஹ்மம்.

ஆ. கே. (ஆத்மபரமாக) ஜீவன் உடல் முதலியவற்றை விட வேறானவன் என எது கூறுகின்றது ?

ப. வேதம்.

2. கே. சூரியனைச்சுற்றி அவனுடன் கூடச் செல்லுகின்றவர்கள் எவர் ?

ப. தேவர்கள். வேதங்கள் என்றும், இங்குள்ள தே³வா : என்று சொல்லுக்கு சிலர் பொருள்கூறுகின்றனர்-

ஆ. கே. உடல் முதலியவற்றைவிட வேறு என்று அறிந்துகொள்ள ஜீவனுக்கு ஸஹாயமாக கூடவே இருப்பவை எவை ?

ப. சமம், தமம், முதலிய ஆறு குணங்கள்.

3. கே. எது சூரியனை அஸ்தமனம் அடையச் செய்கிறது.

ப. தர்மம்.

(ஆ) கே. எது ஜீவனை அவன் சொந்த ஸ்தானத்திற்கு அதாவது பிருஹ்மஸ்வரூபத்திற்கு அழைத்துச் செல்லுகிறது ?

ப. கர்மா, உபாஸனம், முதலிய தர்மம். (ஆத்ம ஞானத்தையளித்து, பிருஹ்மஸ்வரூபத்திற்கு அழைத்துச் செல்லுகிறது)

4. கே. சூரியன் எங்கே நிலைபெற்றிருக்கின்றான் ?

ப. 'ஸத்யம்' எனப்படும் பரமாத்ம ஸ்வரூபத்தில்.

(ஆ) கே. ஜீவன் எங்கே நிலைபெற்றிருக்கின்றான் ?

ப. பரமாத்ம ஸ்வரூபத்தில்.

5. கே. எதனால் மனிதன் சுரோத்ரியனாக ஆகின்றான் ?

ப. ஆசார்யமுகமாக வேதங்களை அத்யயனம் செய்து அவற்றின் பொருள்களையும் அறிந்துகொள்ளுவதால்.

6. கே. எதனால் மனிதன் உயர்ந்த பதவியை அடைகின்றான் ?

ப. தவத்தினால்.

(ஆ) கே. எதனால் பிருஹ்மத்தை அறிகின்றான் ?

ப. 'தபஸ்' எனப்படும் "மனனத்தால்"

குருமுகமாக அறிந்த விஷயத்தை பல யுக்திகளைக் கொண்டு ஆராய்ந்து பார்த்தல் என்பதே "மனனம்", இதனால் பிரமாணத்திலும் பிரமேயத்திலும் உள்ள சந்தேகங்கள் ஒழிந்து தத்வ நிச்சியம் ஏற்படுகிறது.

கே. எது மனிதனுக்கு உண்மையில் ஸஹாயமாக இருக்கிறது ?

ப. தைரியம்.

(ஆ) கே. ஜீவன் எதனால் இப்பொழுது உள்ள ஜீவ ஸ்வரூபத்தைக்காட்டிலும் வேறான வாஸ்தவ பிருஹ்ம ஸ்வரூபத்தை அடைகின்றான் ?

ப. நிதித்யாஸனத்தால்.

8. கே. மனிதன் எதனால் புத்திசாலியாக ஆகின்றான்?

ப பெரியோர்களை சேவிப்பதால்.

(ஆ) கே. சிரவணம், மனனம் முதலியவை எதன் மூலம் சித்திக்கின்றது ?

ப. ஆசார்ய ஸேவையின் மூலம்.

9. கே. பிராம்மணர்கள் எதனால் தேவர்கள், அதாவது சுவர்க்கத்திற்குச் செல்ல தகுதியுள்ளவர்களாக ஆகின்றனர் ?

ப. வேதாத்யயனத்தால்.

10. கே. பிராம்மணர்கள் மனிதர்கள் என எதனால் கருதப்படுகின்றனர் ?

ப. உடலில் நான் என்ற எண்ணங்கொண்டு அதனால் ஜனனத்தையும் மரணத்தையும் அடைவதால்.

11. கே. துஷ்ட மனிதர்களுக்கும் இவர்களுக்கும் பொதுவாக இருப்பது எது ?

ப. தெய்வத்தையும், பெரியோர்களையும் நிந்தனை செய்தல். துராசாரம், இவை இருவர்களுக்கும் பொதுவானவை.

9—10-வது கேள்விகளின் பதில்களை அதாவது வேதாத்யயனம், சமம், தமம், முதலிய குணங்கள், ஸதாசாரம் இவற்றை அனைவரும் பின்பற்றவேண்டும். 10–11 வது கேள்விகளின் பதில்களை அதாவது, தேஹாத்ம பாவம், தெய்வநிந்தை, பெரியோர்கள் நிந்தை துராசாரம், முதலியவற்றை அனைவரும் ஒழிக்கவேண்டும் என்பது கருத்து.

12. கே. க்ஷத்திரியர்கள் தேவர்களாக அதாவது சுவர்க்கத்திற்குச் செல்லத்தகுதியுள்ளவர்களாக எதனால் ஆகின்றனர் ?

ப. வில்வித்தையை நன்கு அப்யஸித்து அதன்மூலம் பிரஜைகளை இரக்ஷித்தலால்.

13. கே ஸத் புருஷர்களுக்கும் இவர்களுக்கும் பொதுவான தர்மம் யாது ?

ப. யஜ்ஞங்களை அனுஷ்டித்தல்.

14. கே. க்ஷத்திரியர்கள் மனிதர்கள் என எதனால் கருதப்படுகின்றனர் ?

ப. பயத்தால் (வில்வித்தை முதலியவற்றைக் கற்று பிரஜைகளை நன்கு பரிபாலித்துவந்தால் சுவர்க்கத்தை அடைகின்றான். எதிரிகளைக்கண்டு பயந்து குடிகளைச் சரிவர இரக்ஷிக்கவில்லையேல் ஜனனமரணங்களை அடைந்துகொண்டே இருக்கின்றான் என்பது கருத்து).

15. கே. துஷ்டர்களுக்கும் இவர்களுக்கும் சமமான தர்மம் யாது ?

ப. கஷ்டப்படும் பிரஜைகளை இரக்ஷிக்காமல் தியாகம் செய்தலே.

16. கே. யஜ்ஞத்தில் உபயோகப்படும் 'ஸாம' என்பது என்ன ?

ப. மனது (யாகத்திற்கு ஸாமவேதமும். யஜுர் வேதமும் உபயோகப்படுவதுபோல் ஞான யஜ்ஞத்திற்கு பிராணன், மனஸ் இவ்விரண்டும் சிறந்த சாதனங்களாம்)

17. கே. எது யஜ்ஞத்தை நிறைவேற்றுகின்றது ?

ப. ரிக்.

18. கே. எது இல்லாமல் யஜ்ஞத்தை அனுஷ்டிக்க முடியாது ?

ப. ரிக் இல்லாமல் யஜ்ஞத்தை அனுஷ்டிக்கமுடியாது.

6

ரிக் என்ருல் இங்கு வேதவாக்கு. ஆத்ம ஞானமாகிற யஜ்ஞத்தை வேத வாக்கினுல்தான் நிறைவேற்றமுடியும். பிராணன், மனஸ், இவற்றைவிட வேதவாக்கு இந்த யஜ்ஞத்திற்கு மிக அவசியம். ஆதலால்தான் **ஔபனிஷத³ம் புருஷம் ப்ருச்ச²ாமி** என்று உபனிஷத் கூறுகின்றது.

19. கே. *தேவர்களைக்குறித்து செய்யப்படும் யாகத்திற்கு சிறந்த பயன் யாது?*

ப. *மழை (மழை எல்லா உலகத்திற்கும் திருப்தியை அளிக்கின்றபடியால் அதுவே சிறந்த பயனுகும்)*

20. கே. *பித்ருக்களைக்குறித்து செய்யப்படும் தர்ப்பணத்திற்கு முக்கிய பயன் யாது?*

ப. *நல்ல புத்திரன். தனம் முதலியவை.*

ஆயு: ப்ரஜாம் த⁴னம் வித்³யாம் ஸ்வர்க்க³ம் மோக்ஷம் ஸுகானிச । ப்ரயச்ச²ந்து தத²ா ராஜ்யம் ப்ரீதாஸ்துப்⁴யம் பிதாமஹா: ॥

ஆயுள், பிரஜை, தனம், வித்யை, சுவர்க்கம், மோக்ஷம், சுகம், ராஜ்யம், இவை எல்லாவற்றையும் உங்கள் தர்ப்பணத்தால் திருப்தியடைந்த பித்ருக்கள் உங்களுக்கு அளிக்கட்டும் எனக் கூறப்பட்டிருக்கிறது. இவையெல்லாம் இங்கு **பீ³ஜம்** என்ற சொல்லால் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

21. கே. *இவ்வுலகில் சுக வாழ்வை விரும்புகின்றவர்களுக்கு முக்கியமானது எது?*

ப. *பசுக்கள். (பசுக்களே சிறந்த ஸம்பத் என்று பல நூல்களிலும் கூறப்பட்டிருக்கிறது.* **வித்யதே கோ³ஷு ஸம்பந்நம்**; *என்ற ராமாயண சுலோகத்தைக் காண்க).*

22. கே. *ஸந்ததியை விரும்புகின்றவர்களுக்கு மிகவும் சிறந்த சந்ததி யாது?*

ப. *பிள்ளை. (பெண் வயிற்றில் பிறந்த பிள்ளை முதலியவர்களை ஒருவாறு ஸந்ததி எனக் கூறப்பட்டிருந்தபோதிலும்*

அவர்கள் எல்லோரையும்விட தன் சொந்த பிள்ளையே சிறந்த ஸந்ததியாவான்).

23. கே. ஒருவன் சப்தம், ஸ்பரிசம் முதலிய விஷயங்களையெல்லாம் இந்திரியங்களால் அனுபவித்து வருகின்றான். சிறந்த அறிவாளி "தனம் முதலியவை உள்ளவன்" என உலகத்தினரால் போற்றப்படுகின்றான். ஏராளமாக தானம் செய்யத் தகுதியுள்ளவன் என்றும் பலரால் கருதப்படுகின்றான். உயிருடனும் இருக்கின்றான். இருந்தாலும் பிழைத்திருப்பவனாகக் கருதப்படவில்லை. யார் ?

ப. தேவதைகள், பித்ருக்கள், ஊழியம் செய்கின்றவர்கள், அதிதிகள் இவர்களுக்கு அந்தந்த காலத்தில் அளிக்கவேண்டியதை அளிக்காமல் தானும் அனுபவிக்காமல் இருப்பவனே உயிருடனிருந்தும் பிழைத்திருப்பனாகக் கருதப்படுவதில்லை. (அவனையே "ஜீவன்ம்ருதன்" எனக்கூறுவர்)

24. கே. பூமியைவிடப் போற்றத்தகுந்தவள் யார் ?

ப. தாய்.

25. கே. ஆகாயத்தைவிட உயர்ந்தவன் யார் ?

ப. தகப்பன். (தாய் தந்தையர்களுக்கு பணிவிடை செய்யவேண்டுமெனக் கருத்து).

26. கே. காற்றைவிட வேகமாகச் செல்லக்கூடியது எது?

ப. மனது.

27. கே. புற்களைவிட மிக அதிகமானது எது ? புற்களைவிட பயனற்றது எது ? என்றும் ஒரு பாடமுண்டு.

ப. கவலை. (கவலைப்பட ஆரம்பித்தால் அது மேன்மேலும் வளர்ந்துகொண்டே போகும். கவலைப்படுவதால் சொற்ப பயன்கூட இல்லை. ஆதலால் மனதை அடக்கிக் கவலையையும் ஒழிக்கவேண்டுமெனக் கருத்து).

28. கே. எது தூங்கும்பொழுது கண்களை மூடுவதில்லை?

ப. மீன். ஜீவன் ஸுஷுப்தி காலத்தில் பிருஹ்ம ஸ்வரூபத்தில் லயித்திருக்கின்றபடியால் அவனுக்கு எப்பொழுதும் 'த்ருஷ்டி' எனப்படும் அறிவு குன்றுவதில்லை.

29. கே. பிறந்தவுடன் அசையாமலிருப்பது எது?

ப. முட்டை. பிண்டம் எனப்படும் இவ்வுடலும் பிருஹ்மாண்டமும் இயற்கையில் ஜடமானதால் சேதனன் ஒருவனால் தூண்டப்படாதவரை அசைவற்றதாகவே இருக்கும்.

30. கே. எதற்கு ஹிருதயம் இல்லை?

ப. கல்லுக்கு ஹ்ருதயமில்லை. கல்போல் தேகத்தில் நான் என்ற அபிமானமில்லாத ஞானிக்கு சோகத்தையும், துக்கத்தையும் அனுபவிக்கக்கூடிய ஹிருதயம் கிடையாது.

31. கே. வேகத்தால் விருத்தியடைவது எது?

ப. நதீ.

32. கே. வேறு தேசத்திற்குச் செல்லுகின்றவர்களுக்கு துணைவர் யார்?

ப. தன்னுடன்கூடவரும் கூட்டத்தினர்களே துணைவர்களாம்.

33. கே. வீட்டில் இருக்கின்றவனுக்கு உதவிபுரிகின்றவள் யார்?

ப. மனைவி.

34. கே. வியாதியால் பீடிக்கப்பட்டவனுக்குத் துணைவன் யார்?

ப. வைத்தியன்.

35. கே. இறக்கின்றவனுக்கு எது உதவிபுரிகின்றது?

ப. தானம்.

36. கே. அனைவருக்கும் அதிதி யார்?

ப. ஆஹவனீயம் முதலிய அக்னி (அனைவரும் அக்னி உபாஸனம் செய்யவேண்டுமென்பது கருத்து).

37. கே. எந்த தர்மம் வெகு நாளாக உள்ளது ?

ப. மோக்ஷத்திற்கு சாதனமான யாகம் முதலியவை வெகு நாளாக உள்ளவை.

38. கே. அமிருதம் என்பது எது ?

ப. மோக்ஷத்திற்கு சாதனமான ஹோமத்திற்கு உபயோகப்படுவதால் பசுவின் பாலே அமிருதமெனப்படும்.

39. கே. உலகம் முழுவதும் வியாபித்திருப்பது எது?

ப. வாயு.

[இந்த நான்கு கேள்வி—பதில்களிலிருந்து கோக்ஷீரத்தால் ஹோமம் முதலியவற்றைச் செய்து வாயுஸ்வரூபமாக ஆகி, பிறகு மோக்ஷத்தையடையலாம் என்று கூறப்பட்டதாக ஆகிறது].

40. கே. ஒருவனாக எப்பொழுதும் சஞ்சரிப்பான், யார் ?

ப. சூரியன்.

[உலகம் முழுவதும் வியாபித்திருக்கும் வாயு அழியுங் காலத்திலும் எஞ்சி நிற்பவன் எவன் என்பது இக்கேள்வி யின் கருத்து. சூரியன்போல் ஒளிமயமான ஆத்மாதான் எஞ்சி நிற்பவன் என்பது பதில்].

41. கே. எவன் அடிக்கடி பிறக்கின்றான் ?

ப. சந்திரன். [ஒன்றாகவுள்ள ஆத்ம ஸ்வரூபத்தில் பிரபஞ்சம் எவ்வாறு தோன்றுகின்றது ? மனதினால். மனதிற்கு அதிஷ்டான தேவதை சந்திரன். ஆதலால் 'சந்திரன் அடிக்கடி பிறக்கின்றான்' என்ற பதிலிலிருந்து பிரபஞ்சம் மனதினால் கற்பிக்கப்பட்டு தோன்றுகின்றதல்லாமல் உண்மையில் இல்லை என்று கொள்ளவேண்டும்].

42. கே. பனிக்கு மருந்து எது ?

ப. நெருப்பு. [பனிபோல் ஆத்மஸ்வரூபத்தை மறைத்துக்கொண்டிருக்கும் அவித்யையை நிவிருத்தி செய்யக்கூடியது எது ? என்ற கேள்விக்கு "தத்வமஸி" முதலிய

வாக்கியத்திலிருந்து உண்டாகும் ஞானம் என்பது இங்கு பதிலாக உரைக்கப்பட்டிருக்கிறது. இங்கு 'பணி' என்றால் அவித்யையென்றும், "அக்னி" என்றால் அக்னியை அதிஷ்டான தேவதையாகக்கொண்ட "வாக்" என்றும் கொள்ள வேண்டும்.]

43. கே. மிகப்பெரிய ஆதாரமான வஸ்து எது?

ப. பூமி. [அஜ்ஞானம், அதனால் விளையும் பலவித சுக துக்கங்கள், ஞானம் அதனால் உண்டாகும் மோக்ஷம் எல்லாவற்றிற்கும் ஆதாரமாக இருப்பது இந்த உடல், நமது உடலில் பூமியின் அம்சமே அதிகமானதால் பூமி என்றே அது குறிப்பிடப்பட்டிருக்கிறது.

44. கே. தர்மத்தை அனுஷ்டிக்கச் சிறந்த ஸாதனம் யாது?

ப. விடாமுயற்சி.

45. கே. புகழைப் பெறுவதற்கு உயர்ந்த ஸாதனம் யாது?

ப. தானம். (கொடை)

46. கே. சுவர்க்கத்தையடையச் சிறந்த ஸாதனம் யாது?

ப. உண்மை பேசுதல்.

47. கே. சுகத்தையடையச் சிறந்த ஸாதனம் எது?

ப. நல்லொழுக்கம்.

48. கே. மனிதனுடைய ஆத்மா, எனக் கூறக்கூடியவன் எவன்?

ப. மகன்.

49. கே. தெய்வத்தால் அளிக்கப்பட்ட துணை யார்?

ப. மனைவி.

50. கே. மனித வாழ்விற்கு ஸாதனம் எது?

ப. மழை.

51. கே. மனிதனால் முக்கியமாக ஆச்ரியிக்கப்பட வேண்டியது எது ?

ப. தானம். [44-முதல் 47-வது வரை, விடா முயற்சி, உண்மை பேசுதல், நல்லொழுக்கம், தானம், இவற்றை அவசியம் பின்பற்றவேண்டும் எனக் கூறப்பட்டது. அவற்றுள் தானமே பிள்ளைபோல் ‘ ஆத்மா ” என்றும், மனைவிபோல் உற்ற துணைவன் என்றும், மழைபோல் வாழ்விற்கு சாதனமென்றும் கருதப்படுகின்றபடியால் அதை அவசியம் செய்யவேண்டுமென்று 48-முதல் 51-வது வரை கூறப்பட்டது]

52. கே. தனத்தை சம்பாதிப்பதற்குப் பல சாதனங்களுள் சிறந்தது யாது ?

ப. விடாமுயற்சி.

53. கே. பொருள்களுள் சிறந்தது யாது ?

ப. அறிஞர்களிடமிருந்து சாஸ்திரங்களின் கருத்தைக் கேட்டு அறிதல்.

54. கே. லாபங்களுள் உயர்ந்தது எது ?

ப. ஆரோக்கியம்.

55. கே. சுகங்களுள் சிறந்தது யாது ?

ப. திருப்தியுடன் இருத்தல்.

56. கே. சிறந்த தர்மம் எது ?

ப. யாருக்கும் பயத்தை உண்டுபண்ணாமல், அனைவரிடமும் தயையுடனிருத்தல்.

57. கே. எந்த தர்மம் அழிவற்ற பயனை அளிக்கக் கூடியது ?

ப. வேதத்தில் உரைக்கப்பட்ட தர்மம்.

58. கே எதை அடக்கினால் துன்பத்தை அடையாமலிருக்கலாம் ?

ப மனதை அடக்கினால் துன்பத்தையடையாமல் இருக்கலாம்.

59. கே. யாருடைய சிநேகம் பயனுள்ளது ?

ப. சாதுக்களுடைச் சிநேகம் பயனுள்ளது.

60. கே. எதை விட்டால் அனைவருக்கும் வேண்டியவனாக இருக்கலாம் ?

ப. கர்வத்தை விட்டால் அனைவருக்கும் வேண்டியவனாக இருக்கலாம்.

61. கே. எதை விட்டால் வருந்தாமலிருக்கலாம் ?

ப. கோபத்தை விட்டால் வருந்தாமலிருக்கலாம்.

62. கே. எதை விட்டால் பணக்காரனாக ஆகலாம் ?

ப. காமத்தை விட்டால் பணக்காரனாக ஆகலாம்.

63. கே. எதை ஒழித்தால் சுகத்தையடையலாம் ?

ப. லோபத்தை ஒழித்தால் சுகத்தையடையலாம்.

[காமம், பொருள் இன்னும் வேண்டும் என்ற ஆசை. லோபம் – கிடைத்த பொருளை எக்காரணம்பற்றியும் செலவு செய்ய மனமில்லாமை]

64. கே. பிராம்மணனுக்கு தானம் செய்தால் அதனால் உண்டாகும் பயன் யாது ?

ப. தர்மம்.

65. நடிகர்களுக்கு செய்யப்படும் தானத்திற்கு பயன் என்ன ?

ப. புகழ்

66. கே. சேவகர்களுக்குத் தானம் செய்வது எதற்காக ?

ப. அவர்களை இரக்ஷிப்பதற்காக.

67. கே. அரசர்களுக்கு தானம் செய்வது (வரி கொடுப்பது) எதற்காக ?

ப. வரி கொடுக்காதபோனால் தண்டிப்பார்களே என்ற பயத்தால் கொடுக்கப்படுவதால், அந்த தானம் பயமில்லாமல் இருப்பதற்கென்று ஏற்படுகிறது.

68. கே. ஆத்மஸ்வரூபம் எதனால் மறைக்கப்பட்டிருக்கிறது ?

ப. அஜ்ஞானத்தாலும், அதனால் தோன்றும் பிரபஞ்சத்தாலும் மறைக்கப்பட்டிருக்கிறது.

69. கே. சுஷுப்தி காலத்தில் ஆத்மா ஏன் பிரகாசிப்பதில்லை ?

ப. அப்பொழுது அஜ்ஞான காரியமாகிய பிரபஞ்சம் தோன்றாதபோனாலும், அஜ்ஞானம் அழியாமலே இருக்கின்றபடியால், ஆத்மஸ்வரூபம் பிரகாசிப்பதில்லை.

70. கே. சிநேகிதர்களை எதனால் இழக்கின்றான் ?

ப. பேராசையால்.

71. கே. ஏன் ஒருவன் சுவர்க்கத்தை அடையமுடியாதவனாக இருக்கிறான் ?

ப. விஷய சுகத்தில் உள்ள பற்றுதலால்

69முதல் 71வரை உள்ள கேள்வி, பதில்களின் கருத்து. அஜ்ஞானத்தால் ஆத்மஸ்வரூபம் பிரகாசிக்கவில்லை. ஆதலால் அஜ்ஞானம் விலக ஞானத்தை சம்பாதிக்கவேண்டும். லோபத்தையும் (பேராசையையும்) ஸங்கத்தையும் ஒழித்தால்தான் ஞானம் உண்டாகும்.

72. கே. எந்த மனிதன் இறந்தவனாகக் கருதப்படுவான்.

ப பணமிருந்தும், அவசியம் செலவு செய்யவேண்டிய காரியங்களுக்குக்கூட செலவு செய்யாமல் இரக்ஷித்து வருகின்றவனே இறந்தவனாகக் கருதப்படுவான்.

73. கே. எந்த ராஜ்யம் அழிந்ததாகக்கருதப்படும் ?

ப. அரசன் இல்லாத ராஜ்யம் அழிந்ததாகக் கருதப்படும்.

74. கே. எந்த சிராத்தம் நஷ்டமெனக் கருதப்படும்?

ப. அத்யயனம் செய்த பிராம்மணன் இல்லாத சிராத்

தம் (எந்த சிராத்தத்தில் அத்தியயனம் செய்தவன் வரிக்கப்படவில்லையோ, அந்த சிராத்தம் நஷ்டமாம்)

75. கே. எந்த யாகம் பயனற்றது ?

ப. எதில் வேதத்தில் கூறப்பட்டபடி தக்ஷிணை கொடுக்கப்படவில்லையோ அந்த யாகம் பயனற்றது.

லோபத்தை ஒழிக்காத மனிதன் இறந்தவனுக்குச் சமம் என 72வது கேள்விக்குப் பதில் அளிக்கப்பட்டது. 73, 74, 75 வது கேள்விகளும் பதில்களும் அதற்கு திருஷ்டாந்தமாகக் கூறப்பட்டவைகளாம்.

76. கே. திக் என்றால் எது ? (அதாவது உபதேசம் செய்யக்கூடியவர்கள் எவர்?)

ப வேதங்களை நன்கு அறிந்தவர்கள்.

77 கே. ஜீவனுடைய ஸ்வரூபம் எது ?

ப. பிருஹ்மஸ்வரூபமே ஜீவனுடைய ஸ்வரூபம்.

78 கே. எது அந்நம். (அதாவது அந்நத்தை உண்டு கரைத்துவிடுவதுபோல் கரைக்கப்படவேண்டியது எது?)

ப. இந்திரியங்களும் அதனால் அறியப்படும் இப்பிரபஞ்சமும். (இவையெல்லாம் மித்யை என்று உணர்ந்து இவற்றைத் தள்ளிவிடவேண்டுமென்பது கருத்து)

79. கே. எது விஷம் ?

ப. காமமே விஷம். (ஜனனம், மரணம் முதலிய ஸம்ஸாரத்தை அளிக்கின்றபடியால் காமமே விஷம். 76 முதல் 79 வரை காமத்தை ஒழித்து குருபதேசத்தால் பிரபஞ்சத்தை மித்யை என்று உணர்ந்து அதைத்தள்ளிவிட்டு ஜீவபிருஹ்ம ஐக்யத்தை அறியவேண்டும் என்பது கருத்து

80. கே. சிராத்தத்திற்கு காலம் எது ?

ப. நல்ல பிராம்மணன் கிடைக்குங்காலமே சிராத்தத்திற்கு காலம் (அதாவது ஸத்பாத்ரம் கிடைக்கும் பொழுதே

தானம் முதலியவற்றை செய்யவேண்டும். நல்ல ஆசார்யன் கிடைக்கும் பொழுது தத்துவத்தை அவரிடமிருந்து அறிந்துகொள்ளவேண்டும்.)

81. கே. தவத்தின் இலக்ஷணம் என்ன?

ப. அவரவர்களுக்கு விதிக்கப்பட்ட தர்மத்தை விடாமல் அனுஷ்டித்தலே தவமாம்.

82. கே. தமம் என்றால் என்ன?

ப. மனதைப் போனபடியெல்லாம் விடாமல் அடக்குவதே தமம்.

83. கே. "க்ஷமா" என்றால் என்ன?

ப. "த்வந்த்வம்" எனக் கூறப்படும் பசி, தாகம், ராகம், த்வேஷம் முதலியவற்றை பொறுத்துக் கொள்ளுவதே "க்ஷமா" எனப்படும்.

84. கே. "ஹ்ரீ:" என்றால் என்ன?

ப. கெட்ட காரியங்களைச் செய்ய வெட்கப்பட்டு அவற்றில் ஈடுபடாமல் இருத்தலே "ஹ்ரீ:" எனப்படும்.

85. கே. ஞானம் என்றால் என்ன?

ப. உண்மையான பொருளை அறிந்துகொள்ளுதலே ஞானமாம்.

86 கே "சமம்" என்றால் என்ன?

ப. மனம் அடங்கி இருத்தலே சமமாம்.

கெட்ட விஷயங்களில் செல்லுங்காலத்தில் மனதை அடக்குதல் தமம். அவற்றில் செல்லாமலே அடங்கியிருத்தல் சமம், என்று இரண்டிற்கும் வித்தியாசத்தை அறியவும்.

87. கே. தயை என்றால் என்ன?

ப. அனைவரும் சுகமாக வாழவேண்டும் என விரும்புதல்

88. கே. "ஆர்ஜவம்" என்றால் என்ன?

ப. அனைவரிடமும் சமமான எண்ணத்துடன் கூடியிருத்தல்.

89. கே. ஜயிக்கமுடியாத விரோதி, யார் ?

ப. கோபம்.

90. கே. தீராத வியாதி எது ?

ப. பேராசை.

91. கே. "ஸாது" என்று குறிப்பிடக்கூடியவன் யார் ?

ப. எல்லாப் பிராணிகளுக்கும் நன்மைகளைச் செய்கின்றவன்.

92. கே. "அஸாது" என்று குறிப்பிடக்கூடியவன் யார் ?

ப "தயை" என்ற குணமற்றவன்.

93. கே. "மோஹம்" என்றால் என்ன ?

ப. தர்மத்தில் அறிவில்லாமை.

94. கே. "மானம்" என்றால் எது ?

ப. "தானே பெரியவன்" என்ற அஹங்காரத்துடன் இருத்தல்.

95. கே. "ஆலஸ்யம்" (சோம்பல்) என எதைக் கருதவேண்டும் ?

ப. தர்மத்தை அனுஷ்டிக்காமல் இருத்தலே சோம்பலாம்.

96. கே. "சோகம்" என்றால் எது ?

ப. அறியாமையே 'சோகம்' எனப்படும்.

97. கே. "ஸ்தைர்யம்" (உறுதி) என்றால் என்ன?

ப. சொந்த தர்மானுஷ்டானத்தில் உறுதியுடனிருத்தலே "ஸ்தைர்யம்"

98. கே "தைர்யம்" என்றால் என்ன ?

ப இந்திரியங்களை அதனதன் விஷயங்களிலிருந்து திருப்புதலே தைர்யம்.

99. கே. "ஸ்நானம்" என்றால் என்ன ?

ப மனத்தில் உள்ள அழுக்குகளை — காமம், குரோதம், முதலியவற்றை தியாகம் செய்தலே "ஸ்நானம்" எனப்படும்

100. கே. 'தானம்' என்றால் என்ன ?

ப பூதங்களை இரக்ஷித்தலே தானம்.

101 கே: பண்டிதன் என்பவன் யார் ?

ப. தர்மத்தை அறிந்தவனே பண்டிதன்

102. கே. "நாஸ்திகன்" என்பவன் யார் ?

ப 'பரலோகமில்லை' எனக் கூறும் மூடனே நாஸ்திகன்

103 கே. "மூர்க்கன்" என்பவன் யார் ?

ப நாஸ்திகனே மூர்க்கன் எனப்படுவான்.

104. கே. "காமம்" என்றால் என்ன ?

ப. ஸம்ஸாரத்திற்கு காரணமான வாசனைகளே "காமம்" எனப்படும்

105 கே 'மத்ஸரம்' என்றால் ஏது ?

ப. மனதில் ஏற்படும் தாபங்களே 'மத்ஸரம்' எனப்படும்.

106. கே. 'அஹங்காரம்' என்றால் என்ன ?

ப. கொடிய அஜ்ஞானமே 'அஹங்காரம்' எனப்படும்.

107. கே 'தம்பம்' என்பது யாது ?

ப. தர்மத்தை அனுஷ்டிப்பதாக உலகத்தாரிடம் விளம்பரம் செய்தல்

108 கே. 'தெய்வம்' என்பது யாது ?

ப. ஒருவன் செய்த தானத்தின் பயனே 'தெய்வம்' என வழங்கப்படுகிறது.

109 கே. 'பைசூன்யம்' என்றால் என்ன ?

ப. பிறரை தூஷித்தல்.

110. கே. தர்மம், அர்த்தம், காமம், இம்மூன்றும்

பரஸ்பரம் முரண்பட்டவைகளே ? இம் மூன்றும் ஓரிடத்தில் எவ்வாறு சேர்ந்திருக்கக்கூடும் ?

ப தர்மமும், பார்யையும், பரஸ்பரம் விரோதமில்லாமல், அதாவது, பார்யை தர்மானுஷ்டானத்திற்கு அனுகூலமாக இருந்தால், தர்மத்திலிருந்து அர்த்தமும், பார்யையிடமிருந்து காமமுமுண்டாகும். ஆக அனுகூலமான பார்யையை அடைந்து தர்மங்களையும் அனுஷ்டித்து வந்தால் "திரிவர்க்கம்" எனப்படும், தர்மம், அர்த்தம்; காமம், இம்மூன்றும் சித்திக்கும். அதன் மூலம் கிருஹஸ்தனுக்கும் மோக்ஷத்தில் அதிகாரம் ஏற்படுகின்றது.

111. கே எப்பொழுதும் ஒருவன் நரகத்திலேயே வசிக்கும்படி நேருவதற்குக் காரணம் யாது ?

ப. (1) யாசிக்கும் ஓர் ஏழை பிராம்மணனை, ஏதோ தருவதாக தாமாகவே முதலில் அழைத்து, பிறகு இல்லை என்று எவன் கூறுகின்றானோ, அவன் எப்பொழுதும் நரகத்திலேயே வசிப்பான்.

(2) வேதங்கள் தர்ம சாஸ்திரங்கள், இவற்றை அறிந்த அந்தணர்கள், தேவதைகள், பித்ருக்களைக் குறித்து செய்யவேண்டிய சிராத்தம், முதலியவற்றையெல்லாம் "எல்லாம் பொய், ஒன்றுமே உண்மையல்ல" என்று எவன் கூறுகின்றானோ, அவன் எப்பொழும் நரகத்திலேயே வசிப்பான்.

(3) ஏராளப் பொருள் இருக்கையிலேயே, தானும் அனுபவிக்காமல் பிறருக்கும் கொடுக்காமல் எவன் எப்பொழுதும் இல்லையென்றே கூறிக்கொண்டிருக்கின்றானோ, அவன் எப்பொழுதும் நரகத்திலேயே வசிப்பான்.

112. கே. பிராம்மண்யம் எதனால் சித்திக்கின்றது ? உயர்ந்த குலத்தில் பிறந்ததாலா ? ஒழுக்கத்தாலா? வேதாத்யயனத்தாலா? வேதார்த்தத்தை உணர்ந்ததாலா? பல

அறிஞர்களால் தீர்மானம் செய்யப்பட்ட பதிலை கூறுங்கள். பார்க்கலாம்.

ப. குலத்தாலோ, அத்யயனத்தாலோ அல்லது அதன் அர்த்தத்தை உணர்ந்ததாலோ பிராம்மண்யம் சித்திப்ப தில்லை. நல்லொழுக்கத்தால் தான் பிராம்மண்யம் சித்திக் கின்றது. இதில் ஐயமில்லை. ஆகலால் பிராம்மணனுகப் பிறந்தவன், நல்லொழுக்கத்துடன் வாழ பூர்ண முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும் பிராம்மணனுகப் பிறந்து ஒழுக்கமற்றவனுக இருந்தால் அவன் அழிந்தவன் என்றே கருதப்படவேண்டும். வேதங்களிலும் சாஸ்திரங்களிலும் கூறப்பட்டதை அனுஷ்டிப்பவனே பண்டிதன் அனுஷ் டானமில்லாமல், ஏராளமாகப் படிப்பவர்களும் பிறருக்குக் கற்பிப்பவர்களும், சாஸ்திர விமரிசனம் செய்கின்றவர்களும் மூடர்கள், வீணுகக் கஷ்டப்படுகின்றவர்கள் என்றே கருதப் படவேண்டும். நான்கு வேதங்களையும் அத்யயனம் செய்த வனுகிலும் கெட்ட ஒழுக்கமுள்ளவனுகில் அவன் மிகவும் நீசன் என்றும், அடக்க ஒடுக்கத்துடன் அனுஷ்டான சீலனுக இருப்பவனே சிறந்த பிராம்மணன் என்றும் அறிஞர்கள் கருதுகின்றனர்.

113. கே பிரியமான வார்த்தைகளையே பேசுகின்ற வன் எதை அடைகின்றுன் ?

ப. அனைவருடைய அன்பையும் பெறுகின்றுன்.

114 கே. ஆலோசித்துக் காரியங்களைச் செய்கின்ற வன் எதை அடைகின்றுன் ?

ப. எடுத்த காரியங்களில் அதிகமாக வெற்றியைப் பெறுகின்றுன்

115. கே. பல நண்பர்களையுடையவன் எதைப்பெறு கின்றுன்.

ப. சுகமாக வாழ்க்கையை நடத்துகின்றுன்.

116. கே தர்மத்தில் ஈடுபட்டவன் எதை அடைகின்றான் ?

ப. தர்மத்தில் ஈடுபட்டவன் நற்கதியையடைகின்றான்.

117. கே எவன் சந்தோஷத்துடன் வாழ்கின்றான்?

ப. ஐந்து நாளைக்கு ஒரு தடவையோ அல்லது ஆறு நாளைக்கு ஒரு தடவையோ, அல்லது பகலை ஆறு பாகங்களாகப் பிரித்து, ஐந்தாவது பாகத்திலோ அல்லது ஆறாவது பாகத்திலோ தனது சொந்த கிருஹத்தில், சாதாரண காய்கறிகளை சமைத்து புசிப்பவனும், கடனில்லாதவனும், தன் வீடுவாசல், பிள்ளை குட்டி அனைவரையும் விட்டு விட்டு வேறு தேசத்திற்குச் சென்று வசிக்காமல் இருப்பவனுமே சுகமாக வாழ்பவனாகக் கருதப்படவேண்டும்.

118. கே. உலகில் எது ஆச்சரியம் ?

ப. பிரதிதினம் பல பிராணிகள் யமலோகத்திற்குச் சென்றுகொண்டே இருக்கின்றனர். ஆனால் அதைப் பார்த்துக்கொண்டே இருக்கும் மற்றவர்கள் தாம்பட்டும் அழிவற்றவர்களாகவே இருக்க விரும்புகின்றனர். இதைவிட வேறு என்ன ஆச்சரியமிருக்கின்றது ?

119. கே நாம் செல்லவேண்டிய மார்க்கம் எது ?

ப. தர்மத்தின் தத்துவம் குகைக்குள் வைக்கப்பட்டிருக்கிறது. அதாவது அது எளிதில் புலப்படுவதில்லை "இது தர்மம்" "இது அதர்மம்" என நம் புத்தியால் ஊகிக்க முடியாது ஏனென்றால் நம்முடைய ஊகம் நிலையற்றது. நாம் ஒருவிதமாக ஊகித்தால் வேறு சில மேதாவிகள் வேறுவிதமாக ஊகிக்கலாம். வேதங்களும் பலவிதமாகக் காணப்படுகின்றன. ரிஷிகளும் பலர் பலவாறாகவும் கூறியிருக்கின்றனர். ஆகலால் அறிஞர்கள் எந்த மார்க்கமாக செல்லுகின்றனரோ, அதுவே நாம் செல்லவேண்டிய சிறந்த மார்க்கம்.

120. கே. உலகில் பிரதிதினம் நடைபெறும் செய்தி என்ன?

ப. காலன் என்ற புருஷன், அறியாமை என்ற பாத்திரத்தில், இரவு பகல் என்ற விறகில், சூரியன் என்ற நெருப்பை வைத்து எரியவிட்டு, மாஸம், ரிது என்ற கரண்டியால் பிறட்டிப் பிறட்டிப் போட்டு எல்லாப் பிராணிகளையும் வறுத்தெடுத்துக் கொண்டிருக்கிறான் என்பதே உலகில் பிரதிதினம் நடைபெறும் செய்தி.

121. கே. எவன் ஜீவித்திருப்பவனாகக் கருதப்படுவான்?

ப. புண்ணிய கர்மாக்களைச் செய்வதால்ஒருவனுடைய புகழ், பூமியிலும் தேவலோகத்திலும் வியாபிக்கின்றது. எவ்வளவு நாள் வரை ஒருவனுடைய புகழ் நிலைத்திருக்கின்றதோ அவ்வளவு நாள் வரை அவன் ஜீவித்திருப்பவனாகக் கருதப்படுகின்றான். அவனே "புருஷன்" என்றும் கூறப்படுவான்.

122. கே. எல்லாப் பொருளையும் பெற்று எல்லா காமங்களையும் அடைந்தவன் எவன்?

ப. பிருஹ்மஸாக்ஷாத்காரம் செய்தவனே எல்லா பொருள்களையும் பெற்று எல்லா காமங்களையும் அனுபவிப்பவன் ஆவான். அவன், சுகம் துக்கம், பிரியம், அப்பிரியம், சென்றது, வரப்போவது எல்லாவற்றையும் சமமாகக் கருதுவான்.

இவ்வளவு கேள்விகளுக்கும் சரியான பதிலை உரைத்த தருமபுத்திரரை மெச்சி, இவனுக்கு தர்மத்தின் அறிவு பூர்ணமாக இருக்கின்றது. தர்மத்தில் இவனுடைய சொந்த நிலை எவ்வாறு இருக்கின்றது என்பதை பரீக்ஷிக்கவேண்டுமெனக் கருதி இங்கு இறந்துகிடக்கும் உன் சகோதரர்கள் நால்வர்களுள் நீ யாரை விரும்புகின்றாயோ, அவன் இப்பொழுது பிழைப்பான். யாரை நீ விரும்புகின்றாய்? என அந்த யக்ஷன் தர்மபுத்திரரை நோக்கி வினவினான்.

தருமன் :- இதோ கருத்த உடலுடனும், சிவந்த கண்களுடனும், விரிந்த மார்புடனும், நீண்ட கைகளுடனும் கிடக்கின்றானே, அந்த நகுலன் பிழைத்தெழுந்திருக்கட்டும்.

யக்ஷன் :- பதினாயிரம் யானை பலமுள்ள பீமனையும், நிகரற்ற வில்லாளியுமான அர்ஜுனனையும் விட்டு உன் சிறிய தாயின் மகனான நகுலன் பிழைக்கட்டும் என நீ கூறுவதற்குக் காரணம் யாது?

தரு :- மற்ற எல்லா தருமங்களையும்விட தயையுடன் அனைவரையும் சமமாக பாவித்தல் என்பதே சிறந்த தர்மமாகும். தர்மத்தை நாம் அழித்தால், அதாவது அதை நாம் சரிவர அனுஷ்டிக்கவில்லையேல், அது நம்மை அழித்து விடும். தர்மத்தை நாம் இரக்ஷித்தால் அதாவது சரிவர அனுஷ்டித்தால் அது நம்மை கட்டாயம் இரக்ஷிக்கும். ஆதலால் தர்மத்தை நான் ஒரு பொழுதும் கைவிடுவதில்லை.. ஆதலால் என் தாயாராகிய குந்தியின் பிள்ளைகள் மூவருள் நான் ஒருவன் பிழைத்திருக்கிறேன். மாத்ரியின் பிள்ளைகளுள் ஒருவன் பிழைத்தால், குந்தீ – மாத்ரீ இருவரும் பிள்ளைகள் உள்ளவர்களாக ஆவர். நான் குந்தீ – மாத்ரீ இருவரையும் சமமாக பாவிப்பவன். ஒருவளுடைய பிள்ளை மட்டும் பிழைத்திருந்து, மற்றவளுக்குப் பிள்ளையில்லாமல் இருக்க நான் சகிக்கமாட்டேன்.

யக்ஷன் :- இவ்வாறு உன் மனம் தர்ம நெறிதவறாமல் இருப்பதைக்கண்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

ஆதலால் உன் சகோதரர்கள் நால்வருமே பிழைத்து எழுந்திருக்கட்டும்.

உடனே, பீமன், அர்ஜுனன், நகுலன், ஸஹதேவன் என்ற நால்வரும் தூக்கத்திலிருந்து விழித்துக்கொண்டவர்கள்போல் எழுந்திருந்து பசி தாகமற்று முகமலர்ச்சியுடன் காக்ஷியளித்தனர்.

முற்றிற்று.

பாரத ஸாவித்ரீ.

———o———

இதென்ன ஸாவித்ரீ ! புதிதாக இருக்கிறதே என்று பலர் கேட்கலாம். பிரசித்திபெற்ற பதிவிரதாசிரோமணிக்கு ஸாவித்ரீ என்று பெயர் உண்டு. காயத்ரீ மந்திரத்திற்கும் அப்பெயர் உண்டு. ஆனால் இதென்ன பாரத ஸாவித்ரீ என்று ஸம்ஸ்கிருதம் தெரிந்தவர்கள்கூட நினைக்கலாம். பண்டை இதிஹாஸமான மஹாபாரதத்தில் சுவர்க்காரோஹண பர்வத்தின் இறுதியில் இந்த 'பாரத ஸாவித்ரீ' என்ற சொல் காணப்படுகிறது. அப்பர்வத்தில் ஐந்தாவது அத்தியாயத்தில் 64-வது சுலோகத்தில் இந்த "பாரத ஸாவித்ரீ" என்பதை காலையில் எழுந்து எவன் படிக்கிறானோ அவன் பாரத படனத்தின் பலனை அடைந்து பரபிருஹ்மத்தையும் அடைகிறான் என்று புகழ்ந்து சொல்லப்பட்டிருக்கிறது.

इमां भारतसावित्रीं प्रातरुत्थाय यः पठेत् ।
स भारतफलं प्राप्य परं ब्रह्माधिगच्छति ॥

சாதாரணமாக ஸாவித்ரீ என்ற பதம் ஸந்தியோபாஸனத்தில் உள்ள, ஸவித்ரு தேவதையை உத்தேசித்த முக்கியமான காயத்ரீ மஹாமந்திரத்தைக் குறிக்கிறது. அந்த மந்திரமில்லாமல் ஸந்தியோபாஸனம் கிடையாதாகையால் லக்ஷணையாக ஸாவித்ரீ என்ற பதம் ஸந்தியோபாஸனத்தையே குறிக்கலாம். காலையில் எழுந்திருந்து இந்த சுலோகங்களைப் படிக்கவேண்டுமென்று கூறியிருக்கின்றபடியால் இது ஸந்தியோபாஸனத்திற்குச் சமமாக ஆகின்றது. இந்த சுலோகங்கள் பாரதத்தில் உள்ளவையாகையால் இதற்கு

(இது ஹிதபாஷிணீ தொகுதி 1 – பகுதி 11-ல் (1948-ஆு நவம்பர்-மீ) சென்னை தர்மரக்ஷாமணி ஸ்ரீ K. பாலசுப்பிரமணிய அய்யர் M. L. C. அவர்களால் எழுதப்பட்டது.)

"பாரத ஸாவித்ரீ" என பொருத்தமாக பெயர் வைக்கப் பட்டிருக்கிறது என நாம் கருதலாம்

பாரதத்திற்கு உரையாசிரியரான நீலகண்டரும் "காலை ஸந்தியையில் பாரதம் படிக்கவேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. பிரதிதினம் படிப்பதற்கு தகுதியானவையும் பாரத ஸார ஸங்கிரஹமாகவுள்ள இந்த நான்கு சுலோகங்களையும் கட்டாயம் படிக்கவேண்டும்' என்று எழுதியுள்ளார். அந்த சுலோகங்களாவன:—

मातापितृसहस्राणि पुत्रदारशतानि च ।
संसारेष्वनुभूतानि यान्ति यास्यन्ति चापरे ॥ ॥ १ ॥

மாதாபித்ருஸஹஸ்ராணி புத்ரத^{3}ாரச^{1}தாநி ச ।
ஸம்ஸாரேஷ்வநுபூ^{4}தாநி யாந்தி யாஸ்யந்தி சாபரே ॥

हर्षस्थानसहस्राणि भयस्थानशतानि च ।
दिवसे दिवसे मूढमाविशन्ति न पण्डितम् ॥ ॥ २ ॥

ஹர்ஷஸ்த^{2}ான ஸஹஸ்ராணி ப^{4}யஸ்த^{2}ாந ச^{1}தாநி ச ।
தி^{3}வஸே தி^{3}வஸே மூட^{4}மாவிச^{1}ந்தி ந பண்டி^{3}தம் ॥

ऊर्ध्वबाहुर्विरौम्येष न च कश्चिच्छृणोति मे ।
धर्मादर्थश्च कामश्च स किमर्थं न सेव्यते ॥ ॥ ३ ॥

ஊர்த்^{4}வபா^{3}ஹுர் விரௌம்யேஷ ந ச க:சிச்ச்^{2}ருணோதி மே ॥
த^{4}ர்மாத^{3}ர்த^{2}: ச காம: ச ஸ கிமர்த^{2}ம் நஸேவ்யதே ॥

न जातु कामान्न भयान्न लोभात्
धर्मं त्यजेज्जीवितस्यापि हेतोः ।
नित्यो धर्मस्सुखदुःखेत्वनित्ये
जीवो नित्यो हेतुरस्यत्वनित्यः ॥ ॥ ४ ॥

ந ஜாதுகாமாந்ந ப[4]யாந்ந லோப[4]ாத்
த[4]ர்மம் த்யஜேஜ்ஜீவிதஸ்யாபி ஹேதோ: ।
நித்யோ த[4]ர்மஸ்ஸுக[2] து[3]: கே[2]த்வநித்யே
ஜீவோ நித்யோ ஹேதுரஸ்யத்வநித்ய; ॥

கருத்து : நம் பெரியோர்கள் எந்த விஷயங்களை முக்கிய நோக்கங்களாக வைத்துக்கொண்டு ஒவ்வொரு மனிதனும் தினந்தோறும் வாழ்க்கையை நடத்தவேண்டுமென்று கருதினர்களோ, அவற்றை ஒருவன் காலையில் எழுந்திருந்தும் ஸ்மரிப்பது அவன் கடமை என நூல்களில் சொல்லுவது வழக்கம். அந்த சுலோகங்களை பிரதிதினம் படிக்க வேண்டுமென்று கூறப்பட்டிருக்கின்றபடியால் இவற்றில் அடங்கியுள்ள கருத்துக்கள் நம் தேசத்தில் உள்ள எல்லா மக்களின் வாழ்க்கைக்கும் அடிப்படையாக உள்ளவை என்பதில் ஐயமில்லை. இந்த நான்கு சுலோகங்களின் கருத்துக்களைத்தான் வியாஸபகவான் உலகத்தாருக்குச் செய்யும் முக்கிய உபதேசமாகத் தீர்மானித்திருக்கிருர். அவை யாவன :—

1. இவ்வுலகில் ஒரு ஜீவன் எண்ணிறந்த பிறப்பு இறப்புக்களை அனுபவிக்கின்றபடியால், இந்த அநாதியான ஸம்ஸார வாழ்க்கையில் பல ஆயிரக்கணக்கான தாய் தந்தையர்களையும் பிள்ளை பெண்டீர்களையும் பார்த்துப் பழகி இருக்கிருன். இனி வரும் பல பிறப்புகளிலும் இவர்களிடம் பழகப்போகிருன், ஆதலால் உலக அநித்யம்.

2. இந்த ஜீவனுக்கு ஸந்தோஷத்தி
கும் பல இடங்களில் பல காரணங்கள் (
ஆனல் அவையெல்லாம் அறிவில்லாதவ
கொள்ளுமே தவிர விவேகமுள்ளவனை

3. இரு கைகளையும் உயரத் தூக்கிக்கொண்டு நான் இதைக் கத்துகிறேன். ஆனால் ஒருவனும் கேட்கிறான் இல்லை. அதாவது :— தர்மத்திலிருந்துதான் அர்த்தமும் காமமும் உண்டாகின்றன. அப்படி இருக்க ஏன் தர்மம் அனுஷ்டிக்கப்படவில்லை.

4. ஒரு பொழுதும் காமத்தினாலாவது, பயத்தினாலாவது, உலோபத்தினாலாவது, உயிரைக் காப்பாற்றிக் கொள்ளுவதற்காகவாவது தர்மத்தை விடக்கூடாது. தர்மம் எப்பொழுதும் நிலையாகவுள்ளது. சுகமும் துக்கமும் நிலையில்லாதவை. ஜீவன் நித்யமாக உள்ளவன். ஆனால் உடல் நித்யமில்லை.

இக்கருத்துக்களை பின்பற்றி மனிதன் தன் வாழ்க்கையை நடத்திக்கொண்டு வரவேண்டுமென்பது நம்முடைய பாரததர்மத்தின் அடிப்படையான நோக்கமாகும்.

டம், கும்பகோணம்,